பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6 00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 புரட்டாதி 30 புதன்கிழமை (16-10-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 242

# தமிழ்க் கட்சிகளிடமிருந்து ஆயுதம் பறிக்குமாறு பிக்குகள் வலியுறுத்து!

## திருமலைச் சம்பவத்தைக் காட்டி அரசாங்கத்திடம் கோரிக்கை

கொழும்பு, ஒக்ரோபர். 16

தமிழ்க் கட்சிகளிடமிருந்து ஆயுதங்களைப் பறிக்க வேண்டும் என்று பௌத்த குருமார் வலியுறுத்தி உள்ளனர்.

திருகோணமலையில் கடந்த வாரம் பொலீஸ் சப்- இன்ஸ்பெக்டர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தை எடுத்துக் காட்டி–

ஆயுதந்தரித்த தமிழ்க் குழுக்களே அதற்குப் பொறுப்பு எனக் குற்றஞ்சாட்டி –

தமிழ்க் கட்சிகளிடம் இருந்து உடனடியாக ஆயுதங்களைப் பறிக்க வேண்டும் என்று அரசாங்கத்திடம் அவர்கள் கோரியுள்ளனர்.

இந்த விவகாரம் தொடர்பாக கோட்டே நாக விகாரையில் பௌத்தபிக்குகள் நேற்று விசேட கலந்துரையாடல் ஒன்றை நடத்தினர்.

மாதுளுவாவே சோபித தேரர் இக்கலந்துரையாடலுக்குத் தலைமை வகித்தார்.

தமிழ்க் கட்சிகளிடமிருந்து ஆயுதங்களைக் களையுமாறு அரசாங்கத்திடம் வற்புறுத்துவதென அங்கு தீர்மானிக்கப்பட்டது.

விசேட கலந்துரையாடலில்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## உரும்பிராய் யுவதி மரணம் தொடர்பாக 5 சிப்பாய்களுக்கு விளக்க மறியல்

யாழ்ப்பாணம், ஒக். 16

இளம்பெண் ஒருவர் கோண்டாவில் பகுதியில் காணாமற்போய் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பாக 5 இராணுவத்தினரை விளக்க மறியலில் வைக்குமாறு யாழ். மாவட்ட நீதிபதி திரு. அருள்சாகரன் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த மாதம் முப்பதாம் திகதி காணாமற்போனதாகக் கருதப்பட்ட உரும்பிராயைச் சேர்ந்த வெற்றிவேலாயுதம் ரஜினி (வயது 24) என்ற இந்த யுவதியின் சடலம் கோண்டாவில் பகுதியில் மல சல கூடம் ஒன்றில் இருந்து மீட்கப்பட்டதையடுத்து அவரது மரணம் குறித்த விசாரணையை யாழ். மாவட்ட நீதிபதி நேற்று முன்தினம் நடத்தினார்.

இறந்த பெண்ணின் தகப்பனும் தாயாரும் நீதிமன்றத்தில் சாட்சியமளித்தனர். இராணுவச் சிப்பாய் ஒருவரின் சாட்சியமும் பதிவு செய்யப்பட்டது.

இது தொடர்பாக அடையாள அணிவகுப்பு நடத்த வசதியாக கைது செய்யப்பட்டுள்ள 5 இராணுவத்தினரையும் விளக்க மறியலில் வைக்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## காணாமற்போன மாணவி குறித்து இரகசியப் பொலீஸ் விசாரணை

கடந்தமாதம் 8 ஆம் திகதி கைதடிப் பகுதியில் கிருஷாந்தி குமாரசாமி என்ற மாணவி காணாமல் போனது குறித்து கொழும்பில் இருந்து வந்த விசேட இரகசியப் பொலீஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

உயர்மட்ட இரகசியப் பொலீஸ் குழு ஒன்று ஒரு வாரத்துக்கு முன் யாழ்ப்பாணம் வந்து விசாரணையை ஆரம்பித்திருப்பதாகத் தெரிய வந்தது.

காணாமற்போன இந்த மாணவியைத் தேடிச் சென்ற அவரின் தாயார் உட்பட மூவர் பற்றியும் இதுவரை தகவல் கிடைக்கவில்லை.

தற்போது நடைபெறும் விசாரணைகளினால் தகவல்கள் வெளிவரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (இ-3)

## மண்எண்ணெய் விநியோகம் குடாநாட்டில் பெருமளவு சீர்குலைவு

### தனியார் கடைகளில் கூடுதல் விலைக்கு விற்பனை

பொதுமக்களுக்கான மண்எண்ணெய் விநியோகம் பெருமளவில் சீர் குலைந்துள்ளதுடன் விலையும் உயர்வடைந்துள்ளதாக முறைப்பாடு செய்யப்படுகிறது.

கடந்த காலங்களில் யாழ். செயலகம் மூலம் மாதாந்தம் எடுத்துவரப்படும் மண் எண்ணெய் பங்கீட்டு அடிப்படையில் மக்களுக்கு வழங்கப்பட்டு வந்தது.

கடந்த மாதம் முதல் யாழ். செயலகம் இந்தப்பணியை நிறுத்தி பெற்றோலியம் கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைத்திருந்தது.

தற்சமயம் பொது மக்களுக்கு ஒழுங்காக மண் எண்ணெய் விநியோகம் மேற்கொள்ளப்படுவதில்லை என்றும் –

வெளிச்சந்தையில் 40 முதல் 50 ரூபா வரை ஒரு லீற்றர் மண்எண்ணெய் விற்பதாக வும் [illegible] (3)

## செய்திச் சாரம்

### சித்த மருத்துவ ஊழியர்கள் விடுதலை

யாழ்ப்பாணம், ஒக். 16

கடந்த மாதம் 29 ஆம் திகதி கைதடியில் கைது செய்யப்பட்ட யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை ஊழியர்கள் நால்வரும் நேற்றுமுன்தினம் விடுதலை செய்யப்பட்டனர்.

யாழ். பல்கலைக்கழக பதில் துணை வேந்தர் பேராசிரியர் வி. கே கணேசலிங்கம் மேற்கொண்ட நடவடிக்கையின் பயனாக இவர்கள் விடுதலையானார்கள். (இ-3)

### திருநெல்வேலி பகுதியில் ஒருவர் கொலை

யாழ்ப்பாணம், ஒக். 16

நேற்று முன்தினம் திருநெல்வேலிப் பகுதியில் ஒருவர் மின்சாரக் கம்பத்தில் கட்டப்பட்ட நிலையில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மோகன் என்றழைக்கப்படும் 50 வயதுடையவரே சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரிய வந்தது.

காட்டிக் கொடுத்தமைக்காக புலிகளால் மரண தண்டனை விதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படும் துண்டுப்பிரசுரங்களும் அருகில் காணப்பட்டன. (இ-3)

### 445 பயணிகள் திருமலை புறப்பாடு

யாழ்ப்பாணம் ஒக். 16

திருகோணமலையில் இருந்து ஒரு தொகுதி பயணிகளுடன் வந்த மூன்று கப்பல்களும் நேற்று 445 பயணிகளுடன் திருகோணமலை திரும்பின.

''தாரகி'' கப்பல் பழுதடைந்ததாயினும் திருத்தப்பட்டு அது பயணத்தைத் தொடர்ந்தது. (இ-3)

### இணுவில் பகுதியில் மோதல்

யாழ்ப்பாணம், ஒக். 16

இணுவில், மருதனார்மடம் பகுதியில் நேற்று நண்பகல் அளவில் படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் இடம்பெற்றது.

சேத விவரங்கள் தெரியவரவில்லை. (இ-3)

### சடலங்கள் அரச செலவில் அடக்கம்

யாழ்ப்பாணம்- ஒக். 16

கலட்டி தடை முகாம் பகுதியில் கடந்த 9 ஆம் திகதி இடம் பெற்ற மோதலின் போது இறந்த இருவரின் சடலங்கள் அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டுள்ளன என்று பொலீஸார் தெரிவித்தனர்.

இந்த இரு சடலங்களையும் எவரும் அடையாளம் காட்டாததையடுத்து அவை அடக்கம் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## கற்பிட்டியில் அறுவர் கைது

30 லட்சம் ரூபா பெறுமதியான 3 கிலோ ஹிரோய்ன் போதை வஸ்துவையும், 150 லீற்றர் தின்னரையும் இந்தியாவில் இருந்து வள்ளத்தில் கொண்டுவந்த அறுவர் கற்பிட்டிக் கடற் பகுதியில் ஸ்ரீலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-10)

## சென்னை மாநகர மேயராக ஸ்டாலின்

தமிழகத்தில் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தல்களின் போது சென்னை மாநகர மேயராக தி. மு. க. வேட்பாளரும் தமிழக முதல்வர் மு. கருணாநிதியின் மகனுமாகிய மு க ஸ்டாலின் 4 இலட்சத்து 37 ஆயிரத்து 125 மேலதிக வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவருக்கு 8,24,546 வாக்குகள் கிடைத்தன. இவரை எதிர்த்து அ. தி. மு. க. ஆதரவுடன் ஜனதாக் கட்சியில் போட்டியிட்ட திருமதி சந்திரலேகா 3,87,401 வாக்குகளையும், ம. தி. மு. க. வேட்பாளர் எஸ். எஸ். சந்திரன் 86,175 வாக்குகளையும் பெற்றனர்.

இந்தத் தேர்தலில் வெற்றி பெற்றதன் மூலம் மு. க. ஸ்டாலின் மக்களால் நேரடியாகத் தெரிவு செய்யப்பட்ட முதலாவது சென்னை மாநகர மேயராகிறார். (இ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடம் பெயர்ந்த வைத்தியர்களை மீண்டும் யாழ். அழைத்து வர ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஒக் 16

யாழ். வைத்தியசாலையில் பணியாற்றி இடம் பெயர்ந்து வவுனியா, கொழும்பு ஆஸ்பத்திரிகளில் பணியாற்றும் வைத்தியர்களை யாழ்ப்பாணம் அழைத்து வர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

யாழ் ஆஸ்பத்திரியில் நிலவும் வைத்தியர் பற்றாக் குறையையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து பிரச்சினைகள் ஏதும் அவர்களுக்கு இருக்குமேயானால் பயணம் செய்ய முன்னுரிமை அளிக்கப் படவிருக்கிறது. (இ-3)

## சங்கக்கடை இல்லை

வடமராட்சி கிழக்கு ஒக். 16

மாமுனை, குடாரப்பு, செம்பியன்பற்று வடக்குப் பகுதிகளில் கூட்டுறவுச் சங்கக் கிளைகள் எவையும் தற்போது இயங்கவில்லை.

இதனால் மக்கள் நீண்ட தூரம் சென்று வேறுபகுதிச் சங்கக்கடைக் கிளைகளில் பொருள்களைப் பெற செல்ல வேண்டி உள்ளது (இ-36)

## நகரசபை செயலர் வேண்டுகோள்

சாவகச்சேரி, ஒக், 16

சாவகச்சேரி நவீன சந்தைப் பகுதியில் போக்குவரத்து வீதி ஒழுங்கிற்கு இடைஞ்சலாக சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் பிற வாகனங்களை நிறுத்த வேண்டாம் என சாவகச்சேரி நகர சபைச் செயலாளர் சி நடராசா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சைக்கிள்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களை அதற்கென ஒதுக்கியுள்ள பாதுகாப்பு நிலையத்தில் நிறுத்தி ஒத்துழைக்குமாறு அவர்வேண்டியுள்ளார்.

இது தொடர்பான அறிவித்தல் பலகைகள், நவீன சந்தைப் பகுதியில் தொங்கவிடப் பட்டுள்ளன. அத்துடன் இப்பணிக்காக மேலதிக ஊழியர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். (இ- 13)

## மாடுகளுக்கு கருங்கால் நோய்

வடமராட்சி, ஒக்: 16

மருதங்கேணிப் பகுதியில் மாடுகளுக்கு கருங்கால் நோய் ஏற்பட்டுள்ளது.

இதனால் இப்பகுதியில்மாடுகளின் விலை குறைந்துள்ளது. (இ-36)

## நிதி ஒதுக்கீடு

நெடுந்தீவு ஓக. 16

நெடுந்தீவின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக 1996ம் ஆண்டுக்கான பன்முகப்படுத் தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் சுமார் 40 லட்சம் ரூபா வரை நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவற்றில் நெடுந்தீவு மகா வித்தியாலய விஞ்ஞான கூடத்துக்கு ரூபா இரண்டு லட்சமும், குமுதினி படகு திருத்த வேலைகளுக்கென (இயந்திரத்துக்கான நிதி தவிர்த்து) ரூபா ஆறு லட்சமும் பல. நோ. கூ. சங்க களஞ்சியம் அமைப்பதற்கென ரூபா ஆறு லட்சமும், நீர்ப்பாசனக் குளங்கள் புனரமைப்பு, வள்ளங்கள் கொள்வனவு போன்றவற்றுக்கு ரூபா பதினைந்து லட்சமும்ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (உ-111)

## திருத்தி வாசிக்கவும்

நேற்றைய உதயன் இதழின் 6 ஆம் பக்கத்தில் பிரசுரமான நவாலி அட்டகிரி முருகன் தேவஸ்தான வழிபடுவோர் சங்க விளம்பரத்தில் —

இரண்டாம் பந்தியை —

மேலும் புதிதாகச் சேர விரும்பும் அங்கத்தவர்கள், பொருளாளர் திரு சி சிவலிங்கத்துடன் நவம்பர் 18 ஆம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொண்டு செலுத்துமாறு கேட்கப்பட்டுள்ளனர் —

[illegible]


## இராமநாதன் பாலர் பாடசாலை

இராமநாதன் பாலர் பாடசாலை 21 - 10 - 96 திங்கட்கிழமை விஜயதசமியன்று ஆரம்பமாகவிருப்பதால் அனுமதி பெற விரும்புவோர் முன்னதாகக் கல்லூரி அதிபருடன் தொடர்பு கொள்ளவும்.

ஆ. சிவஞானசுந்தரம்
அதிபர்

இராமநாதன் கல்லூரி,
சுன்னாகம்.
(C/3292)



வெளிவந்து விட்டது!

துரித மீட்டலுக்கு,

க. பொ. த. (சா. த) வகுப்புகளுக்குரிய

## ★ வர்த்தகமும் கணக்கியலும் ★
## வினா - விடை

★ கடந்த 8 வருட பொதுப்பரீட்சை வினாக்களையும்
★ எதிர்பார்க்கை வினாக்களையும் விடைகளையும் உள்ளடக்கியது.

விலை ரூபா 55/-

ஆக்கியோன;
தம்பித்துரை பாலகிருஷ்ணன்
(ஆசிரியர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

வெளியீடு:
ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை,
யாழ்ப்பாணம்.
(43168)



## வெள்ளிவிழாக் காணும் அதிபர்கள்

திரு செ. குபேரநாதன் (அதிபர்)
திரு. நா. விக்கினேஸ்வரன் (கனிஷ்ட அதிபர்)

தங்களின் தன்னலமற்ற சேவையினால் மாணவ சமுதாயத்திற்கு அரும்பணியாற்றி இருபத்தைந்து ஆண்டுகளை நிறைவு செய்து வெள்ளிவிழாக் காண்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம்.

எங்கள் மாணாக்கரின் கல்வி மேம்பாடு அடையவும் பாடசாலை பல்துறைகளில் மேலும் வளர்ச்சி பெறவும் தங்கள் சேவை தொடர்ந்து நிலவவேண்டும் எனப் பிரார்த்திக்கின்றோம்.

தாங்கள் நலமுடன் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயம்,
மானிப்பாய்.
(8919)



## நன்றி நவிலல்

### திரு. வை. சுந்தரலிங்கம்

(பிரதிக் கல்விப்பணிப்பாளர் விஞ்ஞானம் வலயம் 01)

திரு. வை. சுந்தரலிங்கம் அவர்கள் 06-10-96 அன்று கொழும்பில் காலமான செய்தியை வானொலி மூலம் கேட்டு எமக்கு நேரில் வந்து அறிவித்தல் தந்தவர்களுக்கும் பூதவுடலைக் கொழும்பிலிருந்து எடுத்துவருவதற்கு உதவி புரிந்த வடக்கு— கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கும், வலயம் 01 கல்விப்பணிப்பாளருக்கும் மற்றும் கல்வித் திணைக்கள அதிகாரிகளுக்கும், உத்தியோகத்தர்களுக்கும், இக் கால கட்டத்தில் கொழும்பில் உள்ளவர்களோடு தொடர்பு கொள்வதற்கு உதவி புரிந்த தொலைத் தொடர்பு உத்தியோகத்தர்களுக்கும்—

எமக்கு நேரில் வந்து ஆறுதல் கூறியவர்கள், அனுதாபக் கடிதங்கள் மூலம் ஆறுதல் கூறியவர்கள், மற்றும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்களுக்கும் —

இறுதிக்கிரியைகளில் பங்குபற்றிப் புகழாரம் சூட்டியும், மலர் மாலை, மலர் வளையம் சார்த்தியும், இறுதிக் கிரியைகள் குறிப்பிட்ட நேரத்தில் முடிவடைய ஒத்துழைத்த பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் உட்பட அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனப் பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

திருமதி. தனலக்சுமி சுந்தரலிங்கமும் பிள்ளைகளும்.

கல்லூரி வீதி,
ஆனைக்கோட்டை.
(சி[illegible])


# சிங்களவர் போன்று தமிழர் ஒற்றுமைப் படாதது ஏன்?

## தொண்டமான் கேட்கிறார்

கொழும்பு. ஒக். 16

சிங்களவர்களில் கரையோரச் சிங்களவர்கள் என்றும் மலைநாட்டுச் சிங்களவர்கள் என்றும் பிரிவுகள் உள்ள போதிலும் அவர்கள் ஒற்றுமையாக வாழும் இன்றைய கால கட்டத்தில் ஏன் தமிழ் பேசும் மக்கள் ஒற்றுமையாக வாழ முடியாது?

அமைச்சரும், இ.தொ.கா. தலைவருமான எஸ். தொண்டமான் மேற்கண்டவாறு கேட்டார்.

ஊவாமாகாண சாகித்திய விழாவில் பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

சாகித்தியம் என்பது சிங்கள வழித் தோன்றலாகும். சாகித்தியம் என்று தமிழ் அகராதியில் இல்லை.

சிங்கள மொழியிலான சாகித்திய என்ற சொல்லையே நாமும் பின்பற்றி எமது கலை, கல சாரத்தைப் பேணி வருகின்றோம் என்றும் அவர் கூறினார். (இ-3)

## கோழிக்குஞ்சு இலவசமாக வழங்க ஏற்பாடு

வலிகாமம் மேற்கு பிரதேச செயலகப் பகுதியில் கோழி வளர்ப்பை ஊக்குவிக்கும் நோக்குடன் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் தெரிவு செய்யப்பட்ட 100 குடும்பங்களுக்கு கோழிக்குஞ்சுகளை இலவசமாக வழங்க பிரதேசசெயலக திட்டமிடல் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது.

1996 ஆம் ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான வரவு செலவுத்திட்ட நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இத்திட்டத்தில் ஒவ்வொரு குடும்பத்துக்கும் இருபத்தைந்து குஞ்சுகள் வழங்கப் படவுள்ளன. (இ-12)


## கண்ணீர் அஞ்சலி

அமரர்

### தெய்வானை சின்னத்துரை

மந்துவில் மேற்கைச் சேர்ந்தவரும்,
சாவகச்சேரி வடக்கு கிராம அலுவலருமான
சின்னத்துரை யோகராசா அவர்களின
அன்புத் தாயார்
தெய்வானை சின்னத்துரை

அவர்கள் கடந்த 16-09-1996 ஆம் திகதி சிவபதம் அடைந்ததையிட்டு அவரது குடும்பத்திற்கு எமது சங்கத்தின் சார்பாக கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதுடன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

பிரதேச செயலக ஊழியர்
நலன்புரிச் சங்க அங்கத்தவர்கள்,
சாவகச்சேரி.

பிரதேச செயலகம்,
தென்மராட்சி,
சாவகச்சேரி.
(C/3293)



## மரண அறிவித்தல்கள்

### செல்லத்துரை தங்கப்பொன்னு

திருநெல்வேலி கிழக்கு முடமாவடியைச் சேர்ந்த செல்லத்துரை தங்கப்பொன்னு 14 - 10 - 96 இல் காலமாகி விட்டார்.

இவர் காலஞ்சென்ற செல்லத்துரையின் (பிரபல வர்த்தகர்) மனைவியும், மகாலட்சுமி (கொழும்பு), தில்லைநடராசா (ஓய்வுபெற்ற கிளிநொச்சிD I.T) சண்முகராஜா (ஓய்வுபெற்ற D.I.T) தர்மராஜா (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று 15-10-96 அன்று கிளிநொச்சியில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செ. தர்மராஜா
(மகன்)

438, இராமலிங்கம் றோட்,
யாழ்ப்பாணம்.
(43200)

### சங்கரப்பிள்ளை அருணாசலம்

சங்கானை கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கனடாவை வசிப்பிடமாகக் கொண்டவருமான ச. அருணாசலம் (அப்பன்) 11 - 10 - 96 வெள்ளிக் கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் திரு. திருமதி சங்கரப்பிள்ளையின் புதல்வரும், புனிதமலரின் அன்புக் கணவரும், அபிராஜினியின் அன்புத் தகப்பனும், அருள்செல்வநாயகி, ராசுகி, குகன் (கனடா), நேசதுரை, நேசலிங்கம் (பவா, வேலவன் ரான்ஸ்போட்), இராசகுலேந்திரன் (கனடா), நேசராணி ஆகியோரின் சகோதரனும், இராசதுரை (விவசாயபீடம், கிளிநொச்சி), கௌரிதாசன் (வர்த்தகர்), இராசரத்தினம் (ஆரம்ப நீதிமன்றம், மல்லாகம்) ஆகியோரின் மைத்துனரும், மதுராவின் (கனடா) பெரியதகப்பனும், மயூரன், றமணன், பாமினி, ஜீவிதா, நிசானி, நிருசன் ஆகியோரின் சிறியதகப்பனாரும், கௌசி, சேந்தன், சயந்தினி, அகிலன், திவ்வியா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 11 - 10 - 96 இல் கனடாவில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. இராசரத்தினம்
(மைத்துனர்)

வல்லை வீதி,
சங்கானை.
(43193)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் நல்லூர் பிரதேச நூலகம்,

# தடை செய்யப்பட்ட பொருள்களை

# வடக்கே கடத்திய குழு சிக்கியது!

## முஸ்லிம் வர்த்தகர் கைது, சிங்கள வர்த்தகருக்கு வலை

கொழும்பு, ஒக். 16

வடபகுதிக்குக் கொண்டு செல்வதற்கு அரசினால் தடை விதிக்கப்பட்டிருக்கும் பொருள்களைப் பெருமளவில் விடுதலைப்புலிகளுக்கு விநியோகித்ததாகக் கூறப்படும் புத்தளம் கடமத்தைப் பகுதியைச் சேர்ந்த செல்வந்த முஸ்லிம் வர்த்தகர் ஒருவர் உட்பட ஒரு குழுவை கற்பிட்டி பொலீஸார் கைது செய்துள்ளனர்.

ஆயுதங்கள், எரிபொருள், அசிட் ஆகியன இவ்வாறு விநியோகிக்கப்பட்ட பொருள்களில் அடங்கும் என இலங்கை வானொலி அறிவித்தது.

''செலுலர்'' தொலைபேசிக் கருவியுடன் படகொன்றுக்குள் ஏற முற்பட்ட மூன்று நபர்களை கடமத்தை கரையோரத்தில் வைத்து மீனவர்கள் மடக்கிப் பிடித்தனர். இவர்கள் பின்னர் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அவர்களை விசாரித்ததில் இருந்து அவர்கள் நீண்ட காலம் கடத்தலில் ஈடுபட்டுள்ளார்கள் என்பது தெரிய வந்தது.

கைது செய்யப்பட்டவர்கள் இதற்கு முன்னர் இத்தகைய பல குற்றச் செயல்களில் சம்பந்தப்பட்டமைக்காக பொலீஸ் பாதுகாப்பில் இருந்துள்ளார்கள் என்றும் பொலீஸார் கூறுகின்றனர்.

இந்தச் சந்தேக நபர்களிடம் இருந்து தகவல் கிடைத்ததையடுத்து கொழும்பில் உள்ள — ஆடம்பர வாழ்க்கை வாழும் — சிங்கள வர்த்தகர் ஒருவரை கைது செய்வதற்கும் பொலீஸார் ஒழுங்குகளைச் செய்துள்ளனர்.

பொலீஸார் இவரைக் கைதுசெய்ய முயன்ற போதெல்லாம் அவர் தமது இருப்பிடங்களை மாற்றிக் கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

வடமேல் மாகாண பிரதிப் பொலீஸ் மா அதிபர் சிறிசேன கேரத், பொலீஸ் அத்தியட்சகர் குணதிலகா ஆகியோரின் பணிப்புரையின் பேரில் கற்பிட்டி பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஆனந்த அல்விஸ் தலைமையிலான விசேட குழு ஒன்று மேலும் விசாரணைகளை நடத்தி வருகிறது.

இதேவேளை —

புத்தளம் மாவட்டத்தில் உச்சி மலைக்கும், கீரமுந்தலுக்கும் இடையில் படகில் சென்று கொண்டிருந்த இருவரை கற்பிட்டி பொலீஸார் கைது செய்துள்ளனர்.

படகில் தலா 10 லீற்றர் எஞ்சின் ஒயில் கொண்ட 82 கொள்கலன்கள், 40 கிலோ அசிட் அடங்கிய இரண்டு பெரிய கொள்கலன்கள் ஆகியனவும் நவீன படகு இயந்திரம் ஒன்றும் காணப்பட்டதாகவும் கூறப்பட்டது.

(உ-3)

# கண்டியில் தொழிலாளர் 1 மணி நேரம் மறியல்!

கொழும்பு, ஒக். 16

தமிழ்—சிங்கள சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு நேற்று முன்தினம் கண்டி நடை பாதைகளில் தொழிலாளர்கள் ஒரு மணி நேரம் மறியல் போராட்டம் நடத்தினர்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு வாழ்க்கைச் செலவுப் புள்ளி கொடுப்பனவுகளை வழங்கவேண்டும் என்றும்—

தொழிலாளர் சாசனத்தை உடனடியாகச் சட்டமாக்க வேண்டும் என்றும்—

இன நெருக்கடிக்கு சரியான தீர்வுகாணும் பொருட்டு அதிகாரப் பரவலாக்கலை உடன் செயற்படுத்த வேண்டும் என்றும்—

அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்துவதை கைவிட வேண்டும் என்றும்—

துப்பாக்கிக் கலாசாரம் மீண்டும் தலைதூக்குவதை உடன் ஒழிக்க வேண்டும் என்றும்—

கோரும் கோரிக்கைகளை முன் வைத்தே இப்போராட்டம் இடம்பெற்றது.

கண்டி மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு எதிராகவுள்ள பிரதான வீதியின் நடைபாதையில் நின்று அமைதியான மறியல் போராட்டத்தைத் தொழிலாளர்கள் நடத்தினர்.

இலங்கை பொதுச் சேவையாளர் சங்கத்தால் இப்போராட்ட ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தோட்டத் தொழிலாளர்கள், மின்சாரசபை ஊழியர்கள், ஹோட்டல் ஊழியர்கள், நகரசபைத் தொழிலாளர் உட்பட பலர் இதில் கலந்து கொண்டனர்.

(உ-3)



சபுகஸ்கந்தையில் பொருத்துவதற்காக கொண்டுவரப்பட்ட 10 மெகாவாட் திறனுடைய நான்கு பாரிய ஜெனரேட்டர்கள் களனிக்கு எடுத்துப் போக வழி இல்லாத நிலையில் கடந்த ஐந்து மாதங்களாக கொழும்புத் துறைமுகப்பகுதியில் அப்படியே வைக்கப்பட்டிருந்தன. அந்த ஜெனரேட்டர்களில் ஒன்று 144 சில்லுகளைக் கொண்ட ''ஹைட்ரோலிக் டிரக்'' ஒன்றில் ஏற்றப்பட்ட நிலையில் இருப்பதை மேல் படத்தில் காணலாம்.

இந்த ஜெனரேட்டர் ஏற்றப்பட்ட டிரக்கை களனி ஆற்றுக்கு மேலாக எடுத்துச் செல்வதற்காக இந்தியாவிலிருந்து விசேடமாக இறக்குமதி செய்யப்பட்ட 12 பாரிய துண்டங்களைக் கொண்ட — பாஜ்களை நிபுணர்கள் ஆற்றில் பொருத்தி வருவதைக் கீழே உள்ள படத்தில் காணலாம்.

## கட்டாக்காலி மாடுகளால் தொல்லை

நவாலி, ஒக் 16

நவாலி ஆனைக்கோட்டைப் பகுதியிலுள்ள வயல்களில் இரவு வேளையில் கட்டாக்காலி மாடுகள் புகுந்து நெற் பயிர்களை அழித்து வருவதாகப் புகார் கூறப்படுகின்றது.

இப்பகுதியிலுள்ள பலரது வயல்களில் நெற்பயிர்கள் முளைத்து விட்டதால் வயல் சொந்தக்காரர்கள் பகல் முழுவதும் கட்டாக்காலி மாடுகளிடமிருந்து பயிரைக் காப்பாற்றுவதற்காக காவலில் ஈடுபடுகின்றனர்.

ஆனால் இரவு வேளையில் இவை கூட்டம் கூட்டமாக புகுந்து பயிர்களை அழித்து விடுகின்றன.

(உ-100)

## ஊழியர் முறைப்பாடு

அச்சுவேலி, ஒக். 16

மயிலிட்டி மார்பு நோய் (காச நோய்) வைத்திய சாலை ஊழியர்களுக்கு கடந்த 6 வருடங்களாக சீருடைக்கான துணிவகைகள் வழங்கப்படவில்லை.

ஏனைய அரசாங்க வைத்தியசாலைகளில் கடமைபுரியும் ஊழியர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள், உதவிகள் தமக்கு வழங்கப்படாமல் தாம் புறக்கணிக்கப்பட்டு வருவதாக மயிலிட்டி மார்பு நோய் வைத்தியசாலை ஊழியர்கள் மேலிடத்திற்கு முறைப்பாடு செய்துள்ளனர்.

(உ-11)

## மூடப்பட்டது

நவாலி, ஒக். 16

யாழ். செயலகத்தில் இயங்கி வந்த சமூகசேவைத் திணைக்களப் பிரிவு கடந்த வாரத்துடன் மூடப்பட்டுள்ளது.

[illegible] உத்தியோகத்தர்கள் பிரதேச செயலர் அலுவலகங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்

(உ-100)

## அசமந்தம் போக வழியுண்டு

கடந்த சில நாள்களாக பத்திரிகையில் வரும் சில உள்ளூர்ச் செய்திகள், எமது சமூகம் உண்மையில் சுதந்திரம் பெறத் தகுதியுடையது தானா என்ற சந்தேகத்தை எழுப்புகிறது. இங்கு இப்போது மிகப்பெரும்பாலும் ஓர் இனத்தவர், ஒரு பிரதேசத்தவரே வாழ்கின்றனர் எனலாம். எனவே இங்கே நடக்கும் தாராள மது விற்பனை, கால்நடை களவு, பல்கலைக்கழக பகிடிவதை போன்ற இன்னோரன்ன நடவடிக்கைகளும் ஒரே சமூகத்தவர் தமக்குள்ளேயே சுரண்டுவதிலும், ஏனையோரின் துன்பத்தில் இன்பம் காண்பதிலும் திருப்தி கொள்ளும் ஒரு வர்க்கத்தை உருவாக்கிக் கொண்டு வருகிறார்கள் என்பதனையே காட்டுகிறார்கள். பெட்டிக்கடைகளில் வெளிப்படையாக வைத்து விற்பவர்கள் நாளை மதுவுக்கு ஒரு கால் வைத்து அதையும் சந்தைப்படுத்த முனையலாம்.

இந்தச் சமூகவிரோதச் செயல்களைக்கட்டுப்படுத்த அரசு சட்டங்களை இயற்றியுள்ளதுடன் அச்சட்டங்களை அமுல் செய்ய அதிகாரிகளையும் நியமித்துள்ளது. ஆனால் யாழ்ப்பாணத்தில் இந்த அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவில்லை. பயம் காரணமா? அல்லது பங்கு கிடைக்கிறதா? என மக்கள் சந்தேகிக்கப்படுகிறார்கள். பொதுவாகவே எல்லா அரச அதிகாரிகளும் அசமந்தப் போக்குடனேயே செயற்படுவது போலத் தெரிகிறது.

நீண்டகாலமாக மாற்றங்களின்றி ஒரே கதிரையில் அல்லது ஒரே அலுவலகத்தில் பணியாற்றுபவர்களுக்கு இத்தகைய அசமந்தம் ஏற்படுவது இயல்பு ஒட்டுமொத்தமாக இங்கு 5 வருடங்களுக்கு மேல் கடமையாற்றிய அரச அதிகாரிகளை வேறு மாவட்டத்துக்கு மாற்றிவிட்டு வெளிமாவட்டங்களில் நீண்டகாலம் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் இம்மாவட்டத்தைச் சேர்ந்த அதிகாரிகளை இங்கு இடம்மாற்றிக் கொண்டு வந்தால் இந்தப் பிரச்சினை தீரும் என்று எண்ணுகிறேன்.

வே. பரமேசுவரன்

பிரான்பற்றை,
கோப்பாய் வடக்கு.

## தடுப்பதற்கு முயலுங்கள்

இன்றைய இக்கட்டான காலகட்டத்தில் பல இடர்களுக்கு மத்தியில் யாழ். பல்கலைக்கழகம் இயங்குகின்றது. புதிய மாணவர்களும் அனுமதி பெற்று வந்துள்ளனர். இந்த வேளையில் புதிய மாணவர்கள் மீது பகிடிவதை எனும் ''ராக்கிங்'' நடைபெறுகின்றது. இதனைக் கண்டித்து ''வாசகர் திருமுகம்'' 08-10-96 உதயனில் ''பகிடிவதைச் சீரழிவு'' எனும் தலைப்பில் மூன்று திருமுகங்கள் வெளிவந்ததை தெரிந்ததே;

இதனைப் படித்து கவலை அடைபவர்களில் நானும் ஒருவன். இந்த பகிடிவதைகள் இன்றைய சூழ்நிலையில் நிச்சயமாக தேவையற்ற ஒன்று. இந்தப் பகிடிவதைகள் பல்கலைக்கழக மூத்த மாணவர்கள் எல்லோராலும் மேற்கொள்ளப்படுவதில்லை என்பதை வாசகர்கள் உணர வேண்டும். ஒரு சில மாணவர்கள் செய்யும் செயல்களுக்கு முழு மாணவர்கள் மீதும் பழி சுமத்தப்படுகிறது.

### வாசகர் திருமுகம்

இது விடயத்தில் புதுமுக மாணவர்கள் தம்மை மிகக் கேவலமான முறையில் வதை செய்பவர்களை மார்ஷல், சிரேஷ்ட மாணவ ஆலோசகர், மாணவ ஆலோசகர் ஆகியோருக்கு நேரிலோ அல்லது கடித மூலமோ தெரியப்படுத்தி சம்பந்தப்பட்ட மாணவர்களைத் தண்டிக்கலாம். இதனைக்கருத்திற் கொண்டு புதுமுக மாணவர்கள் செயற்படுவாரேயானால் பகிடிவதை தடுக்கப்படலாம். அவ்வாறு செய்யாமல் முழுமாணவர்களுக்கும் சமுதாயத்தில் இழுக்கு ஏற்படும் வகையில் ஊர் முழுவதிலும் பிரசாரம் செய்வதால் பலன் கிடைக்க மாட்டாது.

யாழ். பல்கலைக்கழகத்திற்கும், சிரேஷ்ட மாணவர்களுக்கும் இழுக்கு ஏற்படாத வகையில் எமது மாணவர்கள் நடந்து கொள்ள வேண்டும் என்று தயவாகக் கேட்டுக் கொள்கிறேன்.

நான்காம் வருட மாணவன்

யாழ். பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.

## சமூகத்துக்கு உதவுங்கள்

யாழ். பல்கலைக்கழகத்தில் பகிடிவதை மோசமாக நடப்பதாக ஒவ்வொரு வருடமும் உதயன் பத்திரிகையில் ஏதோ ஒரு வகையில் செய்தி வெளிவருவது வழமையாகி விட்டது.

இதில் இருந்து சமூகம் ஓர் உண்மையை உணர்ந்து கொள்ள வேண்டும். அதாவது கடந்த வருடம் புதுமுக மாணவர்களாக நுழைந்தவர்கள், ''ராக்கிங்'' வதையால் தாம் பாதிக்கப்பட்டிருந்தால் தாம் சிரேஷ்ட மாணவரானதும் அந்த நிகழ்வைத் தவிர்த்திருக்க வேண்டும். அவ்வாறு தவிர்த்திருந்தால் இன்று பகிடிவதை ஒரு செய்தியாக வருவதற்கு சாத்தியமே இல்லை.

ஆனால், நடப்பதென்ன? ''வாங்கும் போது'' குய்யோ முறையோ என்போர், ''கொடுக்கும் போது'' இதைச் செய்யாவிட்டால் கனிஷ்ட மாணவர்கள் தம்மை மதிக்கமாட்டார்கள் என்ற மனோ நிலைக்கு வந்து விடுகின்றார்கள்.

எனவே, எனது சொந்தக் கருத்தின்படி பகிடிவதை தொடரவே செய்யும். ஆனால் அது உண்மையில் பகிடியாகவே இருக்க வேண்டும் என்பதே எனது பிரார்த்தனை.

ராக்கிங் குறித்துப் பத்திரிகையில் பிதற்றுவோர், எழுதுவோர் இது தொடர்பாக சிறிதளவாகுதல் முயற்சி செய்து பார்க்க வேண்டும்.

உங்களது மகனோ அல்லது மகளோ அல்லது உறவினரோ நிச்சயமாக யாழ். பல்கலைக்கழகத்தில் ஏதோ ஒரு வகுப்பில் பயில்வார்கள், அவர்களிடம் இது குறித்துப் பேசுங்கள்; நிறுத்தும்படி கேட்டுப் பாருங்கள்; புத்திமதி சொல்லுங்கள்; சமூகத்தைப் பற்றிக் கவலைப்படும் நீங்கள் அதற்கு உதவுதற்கு முயற்சியுங்கள்.

த. அரவிந்தன்
பல்கலைக்கழக 2-ம் வருட மாணவன்.
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தலிபான் படைகள் பின் வாங்குகின்றன!

காபூல், ஒக். 16

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலைக் கைப்பற்றியிருந்த தலிபான் படைகளை, முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் அகம்மது ஷா மசூட்டின்படைகள் சுமார் 10 கிலோ மீற்றர் தொலைவு வரை பின்னுக்கு தள்ளிவிட்டன.

காபூலில் இருந்து வரும் செய்திகள் இத்தகவலைத் தெரிவித்தன.

வடக்கு காபூலில் பாதிக்கும் மேற்பட்ட பகுதிகளை தலிபான் படை இப்போது இழந்து விட்டது.

காபூல் நகரில் இருந்து 4 மைல் தூரத்தில் மசூட்டின் படைகள் தலிபான் படைகளை சுற்றிவளைத்துள்ளதாக மற்றொரு செய்தி தெரிவித்தது.

தலிபானின் முன்னாள் இராணுவ அமைச்சர் முல்லா அப்துல் ரஸாக்கை அவரது வீரர்கள் நாற்பது பேருடன் சேர்த்து மசூட்டின் படைகள் கைது செய்துள்ளதாகவும்—

மசூட்டின் படைகளால் கைது செய்யப்பட்ட தலிபான் படையினரில் பாகிஸ்தான் தளபதிகளும் இருந்ததாகவும்- தெஹ்ரான் செய்திகள் தெரிவித்தன.

தலிபான் படைகளுக்கு பாகிஸ்தானும்—

மசூட்டின் படைகளுக்கு ஈரானும் உதவி வருவதாகக் கூறப்படுவது தெரிந்ததே.

இதற்கிடையில்—

காபூலில் முன்னாள் ஜனாதிபதி நஜிபுல்லாவை கொலை செய்ததையும்—

அங்கு பெண்களின் அடிப்படை உரிமைகளுக்கு எதிராக தலிபான் படை விதித்துள்ள கண்டிப்பான உத்தரவுகளையும்—

ஆட்சேபித்து ஆயிரக்கணக்கானவர்கள் பாகிஸ்தானில் ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர். (உ-3)

## நானூறு மாணவர்கள் மீது வன்முறைக் குற்றச்சாட்டு

### தென் கொரியாவில் நடவடிக்கை

கடந்த ஓகஸ்டில் தென் கொரியத் தலைநகர் ஸியோலில் இடம்பெற்ற வன்முறைப் போராட்டங்கள் தொடர்பாக நானூறு மாணவர்களை தென்கொரிய அதிகாரிகள் நீதிமன்றத்தின் முன் குற்றம் சுமத்தி, விசாரணைக்கு நிறுத்தியிருக்கின்றார்கள்.

வடகொரியாவுடன் தென் கொரியாவை இணைக்க வேண்டும் எனக்கோரி நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணியை அடுத்தே ஸியோலில் வன்முறைகள் வெடித்தன.

இந்த வன்முறைகளில் பொலீஸ் தரப்பில் ஒருவர் பலியானார். ஆயிரம் பொது மக்கள் வரை காயமடைந்தனர்.

அந்த வன்முறைகளில் சம்பந்தப்பட்டதாகக் கூறப்படும் நானூறு மாணவர்களே தற்போது விசாரணைக்கு நிறுத்தப் பட்டிருக்கின்றார்கள்.

அனேக மாணவர்களுக்கு எதிராக இரண்டு முதல் மூன்று வருட சிறைத் தண்டனை விதிக்கக் கூடிய குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

சுமார் ஐம்பது மாணவர்களுக்கு எதிராக மோசமான குற்றச்சாட்டுகள் சுமத்தப் பட்டுள்ளன. அவை நிரூபிக்கப்பட்டால் அவர்கள் கூடிய கால சிறைத்தண்டனையைப் பெறுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## நந்தியாலில் காங்கிரஸ் படுதோல்வி

ஆந்திரப் பிரதேசத்தில் முன்னாள் இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் முன்னர் போட்டியிட்டு வெற்றியீட்டிய நந்தியால் நாடாளுமன்றத் தொகுதியில் கடந்த வாரம் இடைத் தேர்தல் நடந்த போது அங்கு காங்கிரஸ் கட்சி பெரும் தோல்வியை எதிர் கொண்டது.

காங்கிரஸ் கட்சி வேட்பாளர் பி.வி. ரெங்கையா நாயுடு இத்தொகுதியில் ஆளும் தெலுங்கு தேசக்கட்சியின் வேட்பாளர் நாகிரெட்டியிடம் 4 இலட்சத்து 31 ஆயிரம் வாக்கு வித்தியாசத்தில் தோற்றுப் போனார். (உ-3)

## டைனோஸர் கால் தடப் பாறைப் பதிவுகள் திருட்டு!

### ஆஸ்திரேலியாவில் சம்பவம்

சிட்னி, ஒக். 16

பதின்மூன்றுகோடி வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்ததாகக் கருதப்படும் டைனோஸர்களின் கால்தடப் பதிவுகள் அமைந்த கற்பாறைகள் களவாடப்பட்டிருக்கின்றன.

மேற்கு ஆஸ்திரேலியாவில் ஒதுக்குப்புறமான பிரதேசம் ஒன்றில் இச்சம்பவம் நிகழ்ந்திருப்பதாக பி. பி. ஸி. அறிவித்தது.

சுமார் 12 அங்குல நீளமும், எட்டு அங்குல அகலமும் கொண்டதாக இரு கால் தடயப் படிவங்கள் அங்குள்ள கற்பாறைப் படிவுகளில் இருந்ததாகவும் —

இனந்தெரியாதோர் அவற்றை பாறைகளில் இருந்து குடைந்து எடுத்துச் சென்று விட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

ஆஸ்திரேலியாவில் இந்த வகை டைனோஸர்கள் வாழ்ந்தன என்பதற்கு இதுவரை இந்த கால் தடயங்கள் மட்டுமே சான்றாகக் கிடைத்திருந்தன என்றும் கூறப்பட்டது. (உ)

## உலக அரங்கில்

## அரச பயங்கரவாதத்தை விசாரிக்க சர்வதேச குற்றவியல் நீதிமன்றம்

### சர்வதேச மன்னிப்புச் சபை கோருகின்றது

உலகம் முழுவதும் ஆட்சியிலிருக்கும் அரசாங்கங்கள்மேற்கொள்ளும் அப்பட்டமான மனித உரிமை மீறல்களை விசாரிப்பதற்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் ஒன்று அமைக்கப்படவேண்டும்.

இத்தகைய பிரசாரம் ஒன்றை சர்வதேச மன்னிப்புச் சபை முடுக்கி விட்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

ஐ நா சபை தொடங்கப்பட்ட பின்னரும் கூட உலகில் நடந்து வரும் இனப்படுகொலைகள், அரச பயங்கரவாதங்கள், காவல் நிலைய கொடுமைகள், கற்பழிப்புக்கள், அப்பாவி மக்கள் மீது இராணுவ குண்டுவீச்சுக்கள் போன்றவை இத்தகைய நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டியதன் தேவையைவலியுறுத்துவதாக அந்த அமைப்பு சுட்டிக் காட்டியுள்ளது. (உ-3)

## நிகராகுவாவில் மீண்டும் இடதுசாரிகள் ஆட்சி?

### வாக்குக் கணிப்பு தெரிவிக்கிறது

சரித்திரச் சிறப்புமிக்க நிகராகுவா நாட்டுத் தேர்தல்கள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளன.

வலதுசாரி - இடதுசாரி உள்நாட்டுப் போரினால் சிதைவுண்ட இந்த நாடு வாக்குப் பெட்டிகள் மூலம் இடதுசாரித்தலைவர் டானியல் ஒரேற்றேவாவைத் தேர்ந்தெடுக்குமா என உலகமே எதிர்பார்க்கிறது.

தேர்தல் பிரசாரம் உச்சக் கட்டத்தை அடைந்து வருகிறது. மக்கள் கருத்துக் கணிப்புகள் டானியல் ஒரேற்றேவாவுக்குசாதகமான நிலை இருப்பதாகத் தெரிவிக்கின்றன. (இ-10)

## உள்ளாட்சித் தேர்தலில் தி.மு.க.கூட்டணி வெற்றி!

சென்னை. ஒக். 16

தமிழ் நாடு உள்ளாட்சி மன்றங்களுக்கு நடைபெற்ற தேர்தல்களில் திராவிட முன்னேற்றக் கழகம் — தமிழ் மாநில காங்கிரஸ் — இந்திய கம்யூனிஸ்ட் கட்சி — கூட்டணி பெருவெற்றியீட்டியிருக்கின்றது.

பெருமளவு இடங்களில் வாக்குகள் எண்ணும் பணி பூர்த்தியான நிலையில் தி. மு. க. கூட்டணி அமோக வெற்றி பெறுவது உறுதியாகியிருந்தது.

தமிழ்நாடு தலைநகர் சென்னையில் மாநகராட்சி மன்ற உறுப்பினர்களுக்கான தேர்தலில் 155 வட்டாரங்களில் 153 இற்கான முடிவுகள் அறிவிக்கப்பட்ட நிலையில் 148

(7 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை விவகாரத்தில் இந்திய அரசு தலையிட வேண்டும் என வற்புறுத்து

### சென்னைக் கருத்தரங்கில் பிரமுகர்கள் உரை

சென்னை, ஒக். 16

''இலங்கைத் தமிழர் படும் இன்னல்களைப் போக்க இந்த விடயத்தில் இந்திய அரசு உடனடியாகத் தலையிட வேண்டும்.''

சென்னையில் தலைநகர் தமிழ்ச் சங்கமும், சர்வதேச ஒருங்கிணைந்த தமிழ்ச்சபையும் அண்மையில் ஏற்பாடு செய்திருந்த கருத்தரங்கு ஒன்றில் இவ்வாறு வலியுறுத்தப்பட்டது.

இக்கருத்தரங்கில் உரையாற்றிய உலகத்தமிழர் சம்மேளனத்தின் தலைவர் டாக்டர் ரி. ஆர். ஜனார்த்தனன் பேசுகையில், ''தமிழர்களின் அவலங்களைப் போக்க இந்திய அரசு காலந் தாழ்த்தாது தலையீடு செய்ய வேண்டும்.'' — என்று வலியுறுத்தினார்.

முன்னாள் மாநில அமைச்சர் ராஜாராம் பேசியபோது-

''இலங்கைத் தமிழர் படும் அவலம் குறித்து தமிழக மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் வேதனைகளை வெளிப்படுத்த தமிழக சட்டசபைக் கூட்டத்தை உடனடியாகக் கூட்ட வேண்டும். தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதைத் தடுக்க உடனடியாகத் தலையிட வேண்டும் எனக் கோரி சட்டசபையில் நிறைவேற்றப்படும் தீர்மானத்தை மாநில அரசு மத்திய அரசிடம் சமர்ப்பிக்க [illegible] [illegible] (...50)

## பல்கலை அனுமதியை 50 வீதம் அதிகரிக்குக!

நாட்டில் பல்கலைக்கழகக் கல்வி பெறும் மாணவர்களின் எண்ணிக்கை அடுத்த சில ஆண்டுகளில் ஐம்பது வீதத்தினால் அதிகரிக்கப்பட வேண்டும். அதாவது வருடந் தோறும் பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெறும் மாணவர்களின் எண்ணிக்கை மேலும் ஐயாயிரத்தால் அதிகரிக்கப்பட வேண்டும்.

—இவ்வாறு தேசிய கல்வி ஆணைக்குழு சிபாரிசு செய்துள்ளது.

அடுத்த ஐந்து வருடகாலத்துக்குள் வடமேற்கு மற்றும் ஊவா மாகாணங்களில் பல்கலைக்கழகங்களை அமைத்து. அவற்றின் தரத்தை உயர்த்த வேண்டும் என்றும் ஆணைக்குழு சிபாரிசு செய்திருக்கின்றது.

தற்போது இலங்கையில் வருடந்தோறும் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படும் மாணவர் எண்ணிக்கை 10 ஆயிரம் மட்டுமே.

இலங்கையில் பொருளாதார நெருக்கடி காரணமாக பல்கலைக்கழகத்துக்கு மிகக் குறைந்த எண்ணிக்கையான மாணவர்களே அனுமதிக்கப் படுவதாக ஆணைக்குழு சுட்டிக் காட்டியுள்ளது.

## ★ மின்சார சபையின் 20 ஊழியர்கள் கடத்தப்பட்டு 3 நாள்களின் பின் விடுதலை

### மட்டக்களப்பில் சம்பவம்

கொழும்பு, ஒக். 16

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள போரதீவுப்பற்று என்ற இடத்தில் இனந் தெரியாதவர்களால் கடத்திச் செல்லப்பட்ட மின்சார சபை ஊழியர்கள் 20 பேரும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அங்குள்ள டிரான்ஸ்போமர் கடந்த செவ்வாயன்று இனந் தெரியாதோரால் சேதமாக்கப் பட்டது.

இதனைத் திருத்துவதற்என மின்சார சபையின் 20 ஊழியர்கள் வாகனம் ஒன்றில் சென்றார்கள்.

இந்த வாகனத்தோடு சேர்த்து 20 பேரும் புதனன்று கடத்திச் செல்லப்பட்டார்கள்.

பின்னர் கடந்த சனிக்கிழமை அன்றே அவர்கள் விடுவிக்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இது குறித்து மட்டக்களப்பு பொலீஸில் புகார் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மேற்படி டிரான்ஸ்போமர் சேதமடைந்ததால் மட்டக்களப்பு நகரின் சில பகுதிகள் இருளில் மூழ்கியுள்ளன. (உ-3)

## ஒத்திவைப்பு

தென்மராட்சி கல்விக் கோட்டப் பாடசாலைகளில் எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவிருந்த ஆங்கிலத் தினப் போட்டிகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன. புதிய திகதிகள் வருமாறு:—

★ சாவகச்சேரிக் கோட்டம்:— 25 ஆம் திகதி சாவகச்சேரி மகளிர் கல்லூரியில்.

★ கொடிகாமம் கோட்டம்:— 26 ஆம் திகதி திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில்.

இதேவேளை—

தென்மராட்சிக் கல்விக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையே 1996 ஆம் ஆண்டுக்கான கணித, விஞ்ஞான பாடங்களுக்குரிய வினா விடைப் போட்டிகள் எதிர்வரும் சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு (புதிய நேரப்படி) நடைபெறவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காயமடைவோருக்குச் சிகிச்சை அளிக்க

# புலிகளிடம் தனியான மருத்துவ படைப்பிரிவு

சமீப காலமாக பல்வேறு தாக்குதல்களைச் சந்தித்த விடுதலைப் புலிகள், காயமடைந்த பெருமளவிலான தமது உறுப்பினர்களுக்கு எவ்வாறு மருத்துவ சிகிச்சைகளை வழங்குகின்றனர்? இது குறித்து 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையில் 'தராகி' எழுதியுள்ள கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.

ஒரு இராணுவத்திற்கு அல்லது ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு போராளிக் குழுவுக்கு போரில் ஈடுபட்டுள்ள தனது வீரர்களின் மனத்திடம் குலையாமல் பேணுவதற்கு, போரில் காயமடையும் தனது வீரர்களைப் பராமரிக்கும் விடயத்தில் ஒழுங்கமைப்பான ஓர் ஏற்பாட்டைச் செய்து வைத்திருப்பது முக்கியமானதாகும்.

போதுமான அளவு மருத்துவக் கவனிப்பு தங்களுக்குக் கிடைக்காது என படைவீரர்கள் உணர்ந்தால் அவர்கள் உறுதியுடன் போரிடமாட்டார்கள். போரில் காயப்படும் தனது சக வீரன் மருத்துவச் சிகிச்சை வழங்கப்படாத நிலையில் இருப்பதைக் காணும் படை வீரர்களுக்கு போரிடும் ஆர்வம் சிதைந்துவிடும்.

### ஜெனிவா உடன்படிக்கை

18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் புதிய நாடுகள் உருவாகிவரவே பெரிய அளவில் படையினர் அணிநிலை கொள்ள வேண்டிய தேவைகள் உருவாகின. இதனால் போரில் காயமடைவோருக்கு அளிக்கப்பட வேண்டிய மருத்துவக் கவனிப்புத் தொடர்பாக புதிய விதிகள் மற்றும் ஒழுங்குகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

எவ்வாறாயினும் 1949 இல் எட்டப்பட்ட ஜெனிவா உடன்பாட்டிலேயே இவை யாவும் முறையாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. இந்த உடன்பாட்டில் ஸ்ரீலங்கா 1959 இல் கைச்சாத்திட்டது.

ஒரு நடவடிக்கையின் போது காயமடைந்தவர்கள், நோயுற்றவர்களை முடிந்தளவு விரைவாகத் தேடி அவர்களுக்கு மருத்துவ உதவிகள் அளிக்கப்பட வேண்டும் என அந்த உடன்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### உடன்படிக்கை பின்பற்றப்படவில்லை

எவ்வாறாயினும் 2 ஆம் உலக மகாயுத்தத்தின் பின்னர் பல நாடுகளில் நடைபெற்ற யுத்தங்களின் போது இந்த ஜெனிவா உடன்பாடு கடைப்பிடிக்கப்படவில்லை என்பதை அவதானிக்க முடிகிறது.

போரில் ஈடுபட்ட தரப்பினர் இறைமையுள்ள நாடுகளாக இராது, அமைப்பு ரீதியில் அமைந்த போராளிக் குழுக்களாக இருந்ததும் இதற்குக் காரணமாக இருக்கலாம்.

ஜெனிவா உடன் பாட்டில் கைச்சாத்திடாத தரப்புகள் இறந்தவர்கள் காயமுற்றவர்கள் தொடர்பாகப் பின்பற்றப்பட வேண்டிய ஒழுங்குகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என அந்த ஒப்பந்தம் கட்டுப்படுத்தவில்லை. முல்லைத்தீவுப் படுகொலைகள் இதற்கு நல்லதோர் உதாரணமாகும்.

அரசாங்கம் ஒன்றுக்கும், போராளிக் குழுவுக்கும் இடையேயானதாக மோதல் இருப்பினும் — அத்தரப்புகள் ஜெனிவா உடன் பாட்டில் கைச்சாத்திடாதிருப்பினும் — காயப்பட்டவர்களுக்கு மருந்துவ உதவிகளை அளிப்பது, இறந்தவர்களின் உடல்களை அப்புறப்படுவது தொடர்பாக நவீன ஆற்றல்களைப் பயன்படுத்த வேண்டுமேயானால் அதுபற்றிய அறிவை போரில் ஈடுபடும் படையினருக்குப் புகட்ட வேண்டியது அவசியமாகின்றது.

காயமடைந்தவருக்கு சிகிச்சையளிப்பது தனியே உள ரீதியாக மட்டும் முக்கியத்துவம் பெறவில்லை. காயமடைந்தவருக்கு ஈடாக மற்றொருவரைத் தேடவேண்டிய நிலை ஏற்படுகிறது; படைக்கு ஆள்திரட்டும் விடயம் ஒரு கடினமான காரியமாக இருப்பதால் காயமடைந்தவர்களுக்குச் சிகிச்சை அளிப்பது மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது.

### இராணுவத்தின் மருத்துவப் பிரிவு

சுமார் ஒரு இலட்சம் வீரர்களைக்கொண்டுள்ளஸ்ரீலங்கா இராணுவத்திடம் இரு மருத்துவப் படைப் பிரிவுகள் உள்ளன. ஒன்று தொண்டர்மருத்துவப் படைப் பிரிவாகவும், மற்றது நிரந்தர மருத்துவப் படைப்பிரிவாகவும் இயங்குகின்றன. பிரிகேடியர் எல். ஆர். நவரத்தினாவின் கீழ் இயங்கும் இந்தப் படைப் பிரிவுகளுக்கு மேஜர் ஜெனரல் சி. துரைராஜா மருத்துவ ஆலோசகராக பணியாற்றுகிறார். இந்த மருத்துவப் படைப் பிரிவுகள் சுமார் இரண்டாயிரம் படைவீரர்களைக் கொண்டுள்ளது. இராணுவத்தில் சேராத வைத்தியர்கள் சிலரும் இந்தப் பிரிவில் பணியாற்றுகிறார்கள்.

### சமாளிக்க முடியாத நிலை

அண்மையில் கிளிநொச்சிச் சண்டைகளின் போது காயமுற்ற படையினரைக் கொழும்புக்கு கொண்டுவந்த போது இந்த மருத்துவப் படைப்பிரிவு தனது முழு ஆற்றலையும் பயன் படுத்திப் பணியாற்றிய போதும் சமாளிக்க முடியாதநிலை தோன்றியதை அவதானிக்க முடிந்தது. இரத்ததானம் செய்யும்படி ஜனாதிபதியே நாட்டு மக்களுக்கு கோரிக்கை விடுத்தார். தேசிய மருத்துவ மனையில் நடைபெறவிருந்த சாதாரண சத்திர சிகிச்சைகள் இரத்தத் தட்டுப்பாடு காரணமாக ஒத்திவைக்கப்பட்டன.

நாட்டின் மருத்துவ வசதிகள் அனைத்தையும் பின்புலமாகக் கொண்டுள்ள — நிரந்தர மருத்துவப் படைப்பிரிவைக் கொண்ட — இராணுவத்திற்கே காயமடையும் படை வீரர்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்களவு அதிகரிக்கும்போது சமாளிக்க முடியாத நிலை தோன்றுமாயின் —

### புலிகளுக்குமருத்துவவசதி கிடைப்பது எப்படி?

விடுதலைப் புலிகள் காயப்பட்ட நூற்றுக்கணக்கான தமது உறுப்பினர்களைக் குறுகிய இடவசதி மற்றும் குறுகிய நேர இடைவெளிக்குள் எவ்வாறு மருத்துவ உதவிகளை வழங்குகிறார்கள் என்பதே கேள்வி ஆகும்.

யுத்தத்தில் காயமடைந்த தமது உறுப்பினர்களுக்கு விடுதலைப்புலிகள் 'சயனைட்' வில்லைகளை உட்கொள்ளக் கொடுக்கிறார்கள் என அண்மையில் அரச தொடர்பு சாதனமொன்றில் மனங்குழம்பிய நிலையில் விளக்கம் ஒன்று அளிக்கப்பட்டது.

அரச படைகளால் கிளிநொச்சி கைப்பற்றியதைத் தொடர்ந்து வடக்கிலுள்ள முக்கிய மருத்துவ மனைகளில் விடுதலைப் புலிகளுக்கு மருத்துவ வசதிகள் கிடைக்காத நிலை தோன்றியதை அடுத்து இந்தக் கேள்வி முக்கியத்துவம் பெறுகிறது.

மருத்துவ வசதிகளைப் பெற முடியாத இந்த நிலையில், தமது உறுப்பினர்கள் பலர் காயப்பட நேரிடும் என பதற்காக எதிர் காலத்தில் பாரிய தாக்குதல்களில் ஈடுபடுவதை விடுதலைப் புலிகள் தவிர்ப்பார்களா?

### தமிழ் நாடு உதவியது

1991 வரை தமிழ் நாட்டிலுள்ள மருத்துவ மனைகள் விடுதலைப்புலிகளுக்கு மிகவும் கைக்கெட்டிய தூரத்தில் இருந்தன எனலாம். மிக மோசமாகக் காயமடைந்த உறுப்பினர்களுக்கு பாக்கு நீரிணையைக் கடக்கும் வரை அவர்களது உயிரைத் தக்க வைக்கும் அளவிற்கு முதலுதவி அல்லது அடிப்படை மருத்துவ உதவிகளை அளித்தால் மாத்திரம் போதும் அதற்குள் அவர் தமிழ் நாட்டிலுள்ள மருத்துவ மனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டு விடுவார்.

1982இல் சாவகச்சேரி பொலீஸ் நிலையம் மீதான தாக்குதலில் ஈடுபட்டு காயமடைந்த சீலன் (சார்ள்ஸ் அன்ரனி) இவ்வாறே வைத்தியம் செய்யப்பட்டு காப்பாற்றப்பட்டார். அதிகளவு இரத்தப் பெருக்கினால் இறந்திருக்க வேண்டிய, அல்லது நிரந்தர ஊனமுடையவராக வேண்டிய சீலன் சம்பவம் நடைபெற்ற சில நாள்களுக்குப் பின்னர் தமிழ் நாட்டில் சத்திர சிகிச்சைக்கு உட்பட்டு பின்னர் நடந்து திரியும் அளவுக்கு சுகப்படுத்தப்பட்டார். விடுதலைப் புலிகள் அமைப்பு அழியாதிருப்பதற்கு தலைவர் பிரபாகரனுக்கு சீலன் உதவினார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற சுற்றிவளைப்பின் போது காயமடைந்து, மதுரை மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை பெற்றுவந்த வேளையிலேயே விடுதலைப் புலிகளின் முதலாவது மாவீரன் சத்தியநாதன் அங்கு சாவைத் தழுவினார்.

இந்திய இராணுவம் நிலை கொண்டிருந்த வேளையில் கூட சிகிச்சைக்காக காயமடைந்த தமது உறுப்பினர்களை தமிழ் நாட்டுக்குக் கொண்டு செல்ல விடுதலைப் புலிகளுக்கு முடிந்தது தங்கள் மருத்துவப் பிரிவை பூரணப்படுத்தத் தேவையான மருந்துகளை அவர்களால் கொண்டுவரவும் முடிந்தது.

ஆனால் ராஜிவ் காந்தியின் படுகொலையை அடுத்து நிலைமை தலைகீழானது. தமிழ் நாட்டிலும், இந்தியாவின் ஏனைய பகுதிகளிலும் மருத்துவ வசதிகள் மறுக்கப்பட்டன. மருந்துகளை கொண்டுவருவதிலும் பாதிப்புக்கள் ஏற்பட்டன.

இருப்பினும், பல உறுப்பினர்கள் காயமடையச் செய்த —ஆனையிறவுப் போரை விடுதலைப் புலிகள் மேற்கொண்டனர். விடுதலைப்புலிகளின் வைத்தியப் பிரிவுகளிலேயே அனைவருக்கும் சிகிச்சைகள் அளிக்கப்பட்டன. மோசமான காயங்களுக்குட்பட்டவர்கள் மாத்திரம் குடாநாட்டிலுள்ள மருத்துவ மனைகளுக்கும், வன்னிக் காட்டிற்குள் சத்திர சிகிச்சைக்காக அனுப்பப்பட்டனர்.

### கள மருத்துவ நிலையங்கள்

விடுதலைப் புலிகளின் கள மருத்துவ நிலையங்களில் சேலையின், பன்டேஜ் போன்ற மருந்துகள் இருந்தன; பின்னணியில் வைத்திய கலாநிதிகளும், மருத்துவ ஊழியர்களும் செயற்பட்டனர். இது விடுதலைப் புலிகளின் மருத்துவப் படைப் பிரிவின் வளர்ச்சியின் ஆரம்ப நிலை என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டியது.

அதிக அளவிலான உறுப்பினர்கள் காயமடைய நேரிடுவதால் அவர்களுக்கு ஏற்ற வேண்டிய இரத்தத்தை சேகரித்து, பேணிப் பாதுகாத்து, விநியோகிக்க வேண்டிய தேவை உருவானது.

அவசரமான வேளைகளில் காயப்பட்டவர்களுக்குப் பெருமளவிலான இரத்தம் ஏற்றுவதற்குத் தேவைப்பட்டது. விடுதலைப் புலிகளின் மருத்துவப் படைப்பிரிவிலுள்ளவர்களுக்கு இரத்தப் பிரிவு பற்றிய விவரங்கள், யாருக்கு என்ன பிரிவைச் சேர்ந்த இரத்தம் ஏற்ற வேண்டும் என்பன போன்ற அறிவூட்டப்பட்டிருப்பதால் காயமடைவோரை அவர்களது கள மருத்துவப் பிரிவுகளில் உடனடியாகக் கவனிக்கக் கூடியதாக உள்ளது.

ஆனையிறவுத் தாக்குதல் முடிவடைந்த கையோடு மணலாற்றில் அமைந்திருந்த விடுதலைப் புலிகளின் 1—4 முகாம் மீது இராணுவம் பாரிய தாக்குதல் ஒன்றை மேற்கொண்டது. இத்தாக்குதலை முறியடிப்பதில் ஈடுபட்ட விடுதலைப் புலி உறுப்பினர் பலர் காயமடைந்தனர். இருப்பினும் அவர்களால் நிலைமையை மிகவும் சிக்கலின்றி சமாளிக்க முடிந்தது.

1991இல் இருந்து விடுதலைப் புலிகளின் பல உறுப்பினர்களுக்கு பல்வேறு நடவடிக்கைகளின் போது காயமடைய நேரிட்டது. பலாலி இராணுவ முகாமின் முன்னணிக் காவலரண்களை விஸ்தரிக்க 1992 இல் தெல்லிப்பளையை நோக்கி மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை, பூநகரித் தாக்குதல், யாழ்தேவி நடவடிக்கை, புலிப்பாய்ச்சல், மணலாறுத் தாக்குதல் (குறைப் பிரசவத்தில் முடிந்த கடந்த ஆண்டுத் தாக்குதல்), சூரியப் பிரகாசம் நடவடிக்கைகள், முல்லைத்தீவுத் தாக்குதல், உண்மை வெற்றி தாக்குதல் ஆகியனவற்றை இவற்றிற்கு உதாரணங்களாகக் குறிப்பிடலாம்.

### புலிகளின் மருத்துவத் திட்டம்

1994 ஆம் ஆண்டு வாக்கில் விடுதலைப் புலிகளின் மருத்துவத் திட்டம், புனர்வாழ்வு, ஆலோசனைகள், உடல் அப்பியாசம் ஆகியனவற்றைக் கொண்டதாக அமைந்தது. ஜெய்பூர் செயற்கைக் கால் உற்பத்திப் பிரிவும் உருவாக்கப்பட்டது.

ஜூலை 1995 வரை வலிகாமத்திலுள்ள சங்குவேலி என்ற இடத்திலேயே இந்தத் திட்டத்தின் முக்கிய பிரிவு செயற்பட்டு வந்தது இந்தத் திட்டத்தில் ஈடுபடுத்தப்பட்ட பெரும் பான்மையினரான உறுப்பினர்களுக்கு போர்க்கலை, நிர்வாக, புலனாய்வு சம்பந்தமான அறிவு புகட்டப்பட்டிருந்தது (இவர்களில் சிலர் சமாதானப் பேச்சுக்களுக்காக கொழும்பிலிருந்து சென்றவர்களுக்கு பாதுகாப்பு வழங்கும் பணியில் ஈடுபடுத்தப் பட்டனர்.)

### மருத்துவக் கல்லூரி

1993 இல் விடுதலைப் புலிகள் தமக்கென, சொந்தமாக, ஒரு மருத்துவக் கல்லூரியை ஸ்தாபித்தனர். பிரபாகரனின் பழைய நண்பரும் அம்பாறை மாவட்டத்தின் திருக்கோயிலைச் சேர்ந்தவருமான வைத்திய கலாநிதி ஜெயகுலராஜா அந்த மருத்துவக் கல்லூரியின் கௌரவ தலைவர் ஆக்கப்பட்டார். அவர் கடந்த வருடம் அந்தப் பதவியைத் துறந்து விட்டார்.

### சயனைட்டுடன் திரியும் மருத்துவர்கள்

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மூத்த உறுப்பினர்ஒருவர் தற்போது அக் கல்லூரிக்குத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். விடுதலைப் புலிகளின் மருத்துவர்கள் கூட "சயனைட்" வில்லைகளை தம்முடன் வைத்திருக்கிறார்கள் 1990 ஆம்ஆண்டளவில் முல்லைத்தீவில் கொங்கிறீட் மற்றும் உருக்கு ஆகியவற்றைப் பயன்படுத்தி நிலத்தடி மருத்துவமனைகள் இரண்டு நிர்மாணிக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தில் நிர்மாணிக்கப்பட்ட மூன்றடுக்குகளைக் கொண்ட நிலத்தடி மருத்துவமனை "சூரியப்பிரகாசம்" —1 நடவடிக்கையை அடுத்து கைவிடப்பட்டநிலையில் உள்ளது.

முல்லைத்தீவிற்கு வடகிழக்கே நிலத்தின் கீழ் அமைக்கபபட்ட பெரிய களஞ்சியக் கட்டுமானம் ஒன்று இவ்வாண்டு ஆரம்பத்தில் மருத்துவ மனையாக மாற்றப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி சண்டைகளில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் பலர் காயமடைந்துள்ளனர். அரசாங்கத்தின் முக்கிய மருத்துவ மனைகள் யாவும் இராணுவக் கட்டுப் பாட்டு பிரதேசத்துக்குள் அகப்பட்டு விட்டன. இந்நிலையிலும் விடுதலைப் புலிகள் காயப்பட்ட தமது உறுப்பினர்களுக்கு மருத்துவ வசதிகளை அளிக்கிறார்கள் என்பது அவர்களுக்கு மேலும் பல நிலத்தடி மருத்துவ மனைகள் உள்ளனஎன்ற எண்ணத்தைத் தோற்றுவிக்கின்றது.

### வெளிப்படையாகத் தெரிந்தது

முல்லைத்தீவு முகாம் மீதான தாக்குதலின் போது பெருமளவிலான விடுதலைப் புலிகள் காயமடைந்தனர். இந்த முகாம் மீதான நடவடிக்கை முடிவடைந்த பின்னரும் காயமடைந்தவர்கள் பற்றிய விவரங்கள் தெரியவில்லை. இருப்பினும் வெளிப்படையாக ஒன்று மாத்திரம் தெரிகிறது. ஒவ்வொரு குடும்பத்தினரையும் ஒரு குலை இளநீர் வழங்குமாறு விடுதலைப் புலிகளால் வன்னி மக்களுக்கு தொடர்ந்து விடுக்கப்பட்டு வரும் வேண்டுகோளே அதுவாகும்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

8 ஸ்ரீ 1135 மொறிஸ் ஒக்ஸ்போட் நீல நிறக் கார், மற்றும் 3600 W றொபின் டைனமோ, 14 இஞ்சி சொனி கலர் T.V, 5 அடித் திரையும் அதற்குரிய லென்ஸ் மற்றும் எலக்ரோனிக் பொருள்களும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: முல்லை வீடியோ விஷன், கொடிகாமம் வீதி, கரவெட்டி. (43187)

## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த படித்த அழகிய 32 வயதுடைய பெண் ஆசிரியைக்கு பெற்றோர் மணமகனைத் தேடுகின்றார்கள் : நட்சத்திரம் அச்சுவினி. தொடர்பு:மே/பா இல:545, உதயன் பணிமனை, யாழ்ப்பாணம். (43184)

## மணமகள் தேவை

வங்கியில் கடமையாற்றும் 35 வயதுடைய இந்து கௌரவ குடும்ப மணமகனுக்கு படித்த அழகுள்ள மணமகளை பெற்றோர் விரும்புகின்றார்கள். தொடர்பு: மே/பா இல:546, உதயன் பணிமனை, யாழ்ப்பாணம். (43185)

## தவறிவிட்டது

கிருஷ்ணர் சிவசேகரநாதனின் 510493702 V இலக்க தேசிய அடையாள அட்டையும், காங்கேசன் சிமெந்துக் கூட்டுத்தாபன தொழில் அட்டையும் யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கும், திருநெல்வேலி சந்தைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து இல. 158/3, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் அலுவகத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (43195)

## நீமியா

மழைகாலம் வந்துவிட்டது. நீமியா இயற்கைப் பசளை பாவித்து அமோக விளைச்சலைப் பெறவும். இது பூச்சிகளின் தாக்கத்தைக் குறைக்கும். சகல கமநலசேவை நிலையங்களிலும், அண்ணா கோப்பிக் கடைகளிலும் கிடைக்கும். (சி-3287)

## ENGLISH

O/L ல் Distinction, Credit பெறுபேறடைய 40 நாள்களில் கற்பிக்கப்படும். (ஆண்டு 9, 10 உட்பட) Paper Class Inter Lond. ஆசிரியரால் 85, சிவன் கோவிலடி, சிவன் கோவில் மேற்கு வீதி, திருநெல்வேலி. (43196)

## இடமாற்றம்

யாழ். கண்டி வீதியில் இயங்கி வந்த ஆட்பதிவுத் திணைக்களத்தின் விசேட அடையாள அட்டைப் பிரிவும் தேசிய அடையாள அட்டைப் பிரிவும் நேற்று முன்தினம் திங்கட்கிழமை முதல் யாழ். செயலகக் கட்டடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளன. (உ-100)

## அ. அட்டைகள் வந்தன

நவாலி, ஒக். 16

யாழ். மாவட்டத்திலிருந்து தேசிய அடையாள அட்டை பெறுவதற்கு விண்ணப்பம் செய்தவர்களில் ஒரு தொகுதியினரின் அடையாள அட்டைகள் கொழும்பிலிருந்து நேற்று முன்தினம் யாழ். ஆள் பதிவுத் திணைக்களத்திற்கு வந்து சேர்ந்துள்ளன. (உ-100)

உ

## கல்வியங்காடு

அருள்மிகு

## இலங்கை நாயகி மனோன்மணி அம்பாள் கோயில்

## கேதாரகௌரி காப்பு

திருகோணமலை ஸ்ரீபத்திரகாளி அம்பாள் கோயில் கேதாரகௌரி விரத காப்பு அடியார்களின் வசதி கருதி இம்முறையும் வழமைபோல் கல்வியங்காடு அருள்மிகு இலங்கைநாயகி மனோன்மணி அம்பாள் கோயிலில் வழங்கப்படும் என்பதை அம்பாள் அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.

கௌரி விரத காப்பு பெறவிரும்பும் அடியார்கள் முன்கூட்டியே தங்கள் பெயர்களை பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
சோ. இரவிச்சந்திரக்குருக்கள்
பத்திரகாளி கோயில்,
திருகோணமலை.

பொ. கிருஷ்ணமூர்த்திசர்மா
ஆலய நிர்வாகம்

சு. பாலசுப்பிரமணியஐயர்
ஆலய உரிமையாளரும், ஆதீன கர்த்தாவும்.

(43194)

கரவெட்டி, தச்சன்தோப்பு

## சிந்தாமணி விநாயகர் ஆலயம்

### வள்ளியம்மன் திருமணப் படனமும் கந்தபுராணப் பூர்த்தியும்

அன்புடையீர்!

எதிர்வரும் 18 — 10 — 96 வெள்ளிக்கிழமை காலை 6.00 மணிக்கு பூசை ஆரம்பித்து, கந்தபுராணப் படனம் தொடரும். பிற்பகல் 4.00 மணிக்கு விசேட பூசை நடைபெற்று, முருகப் பெருமான் வள்ளி தெய்வானை சமேதராக எழுந்தருளி அருள்பாலிப்பார்.

பௌராணிகர்களும், ஆர்வலர்களும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

அனைவரும் வருக! முருகன் அருள் பெறுக!

நன்றி.

இங்ஙனம்,
ஆலய பரிபாலன சபை.

கரவெட்டி மத்தி,
கரவெட்டி

(43191)

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 12 — 06 — 1960

மறைவு: 16 — 10 — 1993

## திருமதி தேவதாஸ் சகாயமேரி

(மேரி)


எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய், பாசத்தின் இருப்பிடமாய், பண்பின் திருவுருவாய் வாழ்ந்து எமை அன்புடன் அரவணைத்து இன்புற வாழ வைத்த எங்கள் தெய்வமே! தாங்கள் எமைப்பிரிந்து மூன்றாண்டு ஓடி மறைந்தாலும் உங்கள் நினைவுகள் எம்மைத் தொடரும்.

இவரின் பிரிவால் துயருறும்:
கணவன், பிள்ளைகள்,
உறவினர்கள்.

இல. 10, மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

(43181)

## 90-ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 24 — 02 — 1957

உதிர்வு: 18 — 07 — 1996

அமரர்

## பொன்னையா விக்கினேஸ்வரன்

(கிராம உத்தியோகத்தர், வேம்பொடுகேணி — பளை)

எம் அன்புத் தெய்வமே! எம்மைப் பிரிந்த
செல்வமே!
பாரினிலே உன்கடமை பவனிவர — இன்று
நேரினிலே நீ இல்லை ஐயா!
பளை மண்ணில் நீ செய்த கடமை எல்லாம்
விண்ணிலும் கேட்குதையா ......
சோகமென்ற வாழ்க்கை இல்லை என்றாய் - விக்கி
நீ சோதியாய்ப் போவதற்கா?
கொடிய நோய் ஒன்று உன்னைக் கவர்ந்ததினால்
உன் உயிரை நீ மாய்த்தாய்.
இன்று-
மாதங்கள் மூன்று மறைந்தாலும்
எம்மைவிட்டகலா — உம்
நினைவுகளை நம் கண்ணீர் அஞ்சலிப்
புஸ்பங்களாய்
உம் காலடிக்குச் சொரிகின்றோம்.

17 - 10 - 96 ஆம் நாள் வியாழக்கிழமை நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையில் அனைவரையும் பங்குகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்:
அன்பு அப்பா, அண்ணாமார் குடும்பம்,
தங்கை குடும்பம், மற்றும் உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

பெரியபளை,
பளை.

(43169)

உ

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## திருமணம்



பேரன்புடையீர்!

நிகழும் சுப மங்களகரமான தாது வருடம், ஐப்பசி மாதம், 2ஆம் நாள் (18-10-1996) வெள்ளிக்கிழமை காலை 6-06 மணி முதல் 7-55 மணி வரை வரும் துலா லக்கினமும், அமிர்தசித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

எமது புத்திரன்
திருவளர் செல்வன்
**முரளிதரன்**
அவர்கட்கும்



எமது புத்திரி
திருவளர் செல்வி
**சுனேத்திரா**
அவர்கட்கும்

அருள்மிகு வண்ணை ஸ்ரீகாமாட்சி அம்பாள் சந்நிதான மண மண்டபத்தில் அம்மன் துணை கொண்டு மாங்கல்ய தாரணஞ் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் தாங்களும் அத்தருணம் சுற்றஞ் சூழ வருகை தந்து மணமக்களை ஆசிர்வதிக்குமாறும், தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்தில் கலந்து சிறப்பிக்குமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

★ தங்கள் நல்வரவை நாடும்: ★

திரு. திருமதி
செ. திருநாவுக்கரசுப் பத்தர்
அவர்களுடன்
திரு. திருமதி க. ஸ்ரீதரன்
திரு. திருமதி தி. திருச்செல்வம்
(டென்மார்க்)
திரு. தி. ரமேஸ் (சுவிஸ்)

"திருப்பதி",
36, சேர் பொன். இராமநாதன் வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

திரு. திருமதி
செ. கந்தசாமிப் பத்தர்
அவர்களுடன்
திரு திருமதி செ. ஸ்ரீஸ்கந்தராசா
திரு. க. மகேஸ்வரன்
திரு. க. ஜெயரட்ணம்
திரு. க. நிமால்
திரு. க. நந்தகுமார்

18, சபாபதி வீதி,
[illegible]
யாழ்ப்பாணம்.

"இருவீட்டார் அழைப்பு" (8903)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம் நல்லூர் கிளைநூலகம்.

உதயன்

## விவசாய நிலங்கள்

யாழ்ப்பாணக் குடாநாட்டின் விவசாய நிலங்களில் பெரும் பகுதியை படையினர் தமது பல்வேறு தேவைகளுக்காகப் பயன்படுத்துகிறார்கள். இதனால் யாழ்ப்பாண மாவட்டத்தின் விவசாயம் பெருமளவில் பாதிக்கப்பட்டிருக்கிறது; உற்பத்தி மிகக் கணிசமான அளவு குன்றியுள்ளது.

இது குறித்து அண்மையில் பலாலியில் நடைபெற்ற உயர்மட்ட மாநாட்டில் பிரஸ்தாபிக்கப்பட்டது. மாநாட்டுக்குத் தலைமை வகித்த பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை இதனைக் கவனத்தில் எடுத்து ஒரு முடிவுக்கு வந்தார்.

படையினரின் வசம் உள்ள விவசாய நிலங்களை அவற்றின் சொந்தக்காரரிடம் திரும்ப ஒப்படைக்க வேண்டும் என்பதே அந்த முடிவாகும். ஆனால் இது கொள்கையளவிலான முடிவே.

அதாவது கொள்கையளவிலான முடிவு எப்போது நடைமுறையாகும்? விவசாயிகளின் நிலங்கள் அவர்கள் தமது தொழிலைச் செய்வதற்கு எப்போது கை வந்து சேரும்? என்பன தெரியாது. அதற்கெனக் கால வரையறை எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை.

சொல்வது சுலபம் செய்வது கடினம் என்ற வகையிலேயே இப்போது அரசாங்க அலுவல்கள் நடைபெற்று வருகின்றன. கடவுள் விடை கொடுத்தாலும் பூசாரி விடை கொடுக்காத தடங்கல்களும் தாராளமாக உண்டு.

தென்மராட்சியில் ஆயிரக்கணக்கான பரப்பு தென்னந் தோட்டங்கள் படையினரின் பாவனையிலேயே உள்ளன. அதே போன்று வலிகாமம் வடக்குப் பகுதியில் வளம் நிறைந்த செம்மண் பிரதேசமும் ஏரையும் மண்வெட்டிகளையும் கண்டு பல வருடங்களாகி விட்டன.

எனவே படையினர் வசம் உள்ள விவசாயக் காணிகளை உரியவர்களிடம் திருப்பி ஒப்படைப்பதற்குக் கால அட்டவணை மிகமிக அவசியம், இலகு வழிமுறைகளும், நடைமுறைகளும் அவசியம்.

நிலச் சொந்தக்காரர்கள்— விவாசாயிகள்— தமது காணிகளைப் பெறுவதற்கு அலுவலகத்துக்கு அலுவலகம் படியேறிக் களைத்துப் போகும் நிலை இருக்கக் கூடாது. இப்போது விவசாய நிலங்களைப் பாவனையில் வைத்துள்ள பொறுப்பு அதிகாரிகளின் தயவில் தங்கியிருக்கும் நிலையும் அடிக்கடி அலையும் நிலையும் உருவாக்கப்படக் கூடாது.

அதே போன்று, விவசாய நிலங்களை இயலுமான அளவுக்கு மீளக் கையளிப்பது என்ற கொள்கையளவிலான முடிவு, மிக விரைவில் எல்லா நிலங்களையும் நிர்ணயிக்கப்பட்ட குறுகியகால இடைவெளிக்குள் திருப்பிஒப்படைப்பது என்று மாற்றப்பட வேண்டும்.

ஏனைய விடயங்களைப் போல இதனையும் வசதிப்படி ஆற அமரச் செய்ய நினைக்கக் கூடாது. இந்த விடயம் இந்தப் பிரதேசத்தின் பிரதான உற்பத்தித் துறையுடன்— குடாநாட்டின் பொருளாதாரத்துடன்— மிகவும் நெருங்கிய தொடர்பு உடையது. ஆகையால் பாதுகாப்புக்குக் கொடுக்கப்படும் முன்னுரிமை போன்று விவசாயத்துக்கும் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். தாமதமும், தடங்கல்களும் முற்றாகத் தவிர்க்கப்பட வேண்டும்.

# மத்தியவங்கி குண்டுவெடிப்பு வழக்கில் மொத்தம் 712 குற்றச்சாட்டுக்கள்

கொழும்பு, ஒக். 16

மத்திய வங்கிக் குண்டு வெடிப்புத் தொடர்பாகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில் விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் மற்றும் 9 பேர் மீது 712 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன என்று கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவிக்கிறது.

இலங்கை வரலாற்றில் இது வரை இவ்வளவு குற்றச்சாட்டுக்களுடன் வழக்குத் தாக்கல் செய்யப்படவில்லை என்றும்—

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழும், கடும் குற்றவியல் சட்டத்தின் கீழும் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும்—

இந்த வழக்கு விசாரணையில் 462 பேர் சாட்சியமளிக்கவிருக்கிறார்கள் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் விவரம் வருமாறு:-

★ வேலுப்பிள்ளை பிரபாகரன்

★ முன்னாள் உளவுப்பிரிவுத் தலைவர் சிவசங்கர் அல்லது பொட்டு அம்மான்

★ கந்தையா ஜீவமோகன் அல்லது சாள்ஸ் மாஸ்டர்

★ தினேஸ்வர் அல்லது நாதன் அல்லது பார்த்திபன் அல்லது சிவசாமி அல்லது தர்மருபன் அல்லது குட்டி அல்லது புலிக்குட்டி அல்லது குணசீலன் அல்லது பொன் நீலன் அல்லது காளி.

★ கதிர்காமத்தம்பி சிவக்குமார் அல்லது ரகு அல்லது சுப்பிரமணியம் விக்கினேஸ்வரன்.

★ செல்லையா நவரத்தினம்.

★ இராஜதுரை அல்லது சந்துரு குலசிங்கம்.

★ கந்தையா சிறிகணேஷ்

★ ராமையா பார்வதி

★ கறுப்பையா கமலநாதன்.

1995 ஜூலை 11 ஆம் திகதிக்கும் 96 ஜனவரி 31 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் சாவகச்சேரி, கிளிநொச்சி, வவுனியா, கொழும்பு ஆகிய இடங்களில் இத் தாக்குதலுக்கு திட்டமிட்டதாக இந்த 10 பேருக்கும் எதிராக வழக்குத் தாக்கல்செய்யப்பட்டது.

## வடக்கு - கிழக்கில் சமுர்த்தி

கொழும்பு ஒக். 16

அடுத்த இரு மாதங்களில் வடக்கு — கிழக்கு மாகாணங்களில் சமுர்த்தி நிவாரண உதவி வழங்கப்படும் என்றும் —

இதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வடக்கு — கிழக்கில் 300 சமுர்த்தி முகாமையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்றும் —

இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சர் எஸ். பி. திஸநாயக்க நேற்றுக் கூறினார். (இ-3)

# விமானப்படையும் கடற்படையும் அடுத்த ஆண்டில் அதிகவலிமைபெறும்

## மேலதிக நிதி ஒதுக்கீடு

லண்டன், ஒக். 16

விமானப்படை, கடற்படை ஆகிய இரண்டையும் மிகவும் வலுப்படுத்தக் கூடிய வகையில் எதிர்வரும் 6 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் வரவு — செலவுத் திட்டத்தில் அதிக நிதி ஒதுக்கப்படவிருக்கின்றது.

கொழும்பு பாதுகப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி செய்தி ஏஜென்ஸி ஒன்று இத்தகவலை வெளியிட்டது.

கடல் பிராந்தியத்தைக் கண்காணிக்க வசதியாக ஆறு புதிய விமானங்களைக் கொள்வனவு செய்ய நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

கடற்படைக்கு இரண்டு பல நோக்குக் கப்பல்கள், 9 அதிவேக தாக்குதல் கப்பல்கள், 2 அதிவேக துப்பாக்கிப் படகுகள், 20 கண்காணிப்பு சிறு கப்பல்கள் வாங்க திட்டமிடப்பட்டுள்ளதாக பெயர் குறிப்பிடவிரும்பாத உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் மிகக் குறுகிய காலத்தில் தங்கள் கடற்படைப் பிரிவை வலுவாகக் கட்டி எழுப்பியுள்ளனர் என்றும் —

அவர்களிடம் இராணுவ எதிர்ப்பு ஏவுகணைகளும், உளவு அறியும் ராடர்களும் இருக்கின்றன என்றும் —

அந்த அதிகாரி மேலும் கூறினார்.

— இவ்வாறு அந்தச் செய்தி ஏஜென்ஸி மேலும் தெரிவித்தது. (உ-3)

## வரவு - செலவுத் திட்டம் அரசுக்கு பெருந் தலையிடி!

அடுத்த ஆண்டிற்குரிய வரவு — செலவுத் திட்டத்தில் வரவை மிஞ்சி ஏற்படும் செலவை — துண்டுவிழும் தொகையை — சமாளிப்பதற்கு அரசாங்கம் பகீரதப் பிரயத்தனம் செய்ய வேண்டியிருக்கும். நாட்டிற்கு உள்ளும், வெளியிலும் அதிக தொகையினைக் கடனாகத் திரட்ட வேண்டி ஏற்படும் என பொருளாதார ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

யுத்த செலவினம் அதிகரித்திருப்பது ஒரு புறமும், மந்தமான பொருளாதார நிலை மறுபுறமும், வரவு - செலவுத் திட்டத்தை சமப்படுத்துவதில் பாரிய இடைவெளியை ஏற்படுத்தும் காரணிகளாக அமைந்துள்ளன என அவர்கள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கம் பெருந்தொகையினை கடன்பட வேண்டியிருக்கும் என தம்மை அடையாளம் காட்ட விரும்பாத அரச பொருளாதார நிபுணர் ஒருவர் தெரிவித்தார்.

எதிர்வரும் 6 ஆம் திகதி வரவு - செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருப்பது தெரிந்ததே. (உ-3)

## யாழ். மாவட்ட வீதிகளை திருத்துவதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக் 16

யாழ். மாவட்டத்தில் உள்ள வீதிகளைத் திருத்தும் பணிகளை மீள ஆரம்பிக்க வீதி அதிகார சபை ஏற்பாடுகள் செய்துள்ளது.

யாழ் மாவட்டத்தில் உள்ள பழுதடைந்த முக்கிய வீதிகளைத் திருத்தும் பணியை வீதி அதிகார சபை மேற்கொண்டு வந்ததாயினும் —

கொழும்பில் இருந்து தார் வந்து சேராததால் அந்த வேலைகள் நிறுத்தப்பட்டிருந்தன.

வீதி திருத்த வேலைகள் அவசரமாக மேற் கொள்ளப்பட வேண்டியிருப்பதால் உடனடியாக 2ஆயிரம் பரல் தார் எடுத்து வரப்படவிருக்கின்றது. (இ-3)

## நிவாரணம் வழங்குவதற்கு இந்தியாவிலிருந்து அரிசி

யாழ். குடாநாட்டில் நிவாரணப் பணிக்கென ஆயிரத்து 750 மெற்றிக் தொன் புழுங்கல் அரிசியை வழங்க இந்தியா விருப்பம் தெரிவித்துள்ளதாக ''இந்து'' பத்திரிகை தெரிவிக்கிறது.

வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கடந்த ஜூலை மாதம் இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த போது இந்திய அரசு இதற்கு உடன்பாடு தெரிவித்திருந்தது.

முதலில் இந்த அரிசியை யாழ்ப்பாணத்துக்கு நேரடியாக அனுப்பி வைக்க ஆலோசிக்கப்பட்ட போதிலும்—

பின்னர் அந்த யோசனை கைவிடப்பட்டது.

புதுடில்லியில் இருந்து கிடைக்கும் செய்திகளின் படி இந்த அரிசி இரு வாரங்களில் கொழும்பு துறைமுகத்துக்கு அனுப்பி வைக்கப்படவிருக்கிறது.

கொழும்பு துறைமுகத்தில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு அரிசி அனுப்பி வைக்கப்படும். (இ-3)

## புதிய தபால் பெட்டிகள்

அச்சுவேலி, ஒக். 16

அச்சுவேலி தபால் நிலையத்திற்கு ஐந்து புதிய தபாற் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. (உ-11)

## பளைக் கோட்ட பாடசாலை நிர்வாகம்

வடமராட்சி ஒக் 16

பளை கோட்டப் பாடசாலைகளின் நிர்வாகம் யாழ். பிராந்திய கல்விப்பணிப்பாளரின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பிராந்திய கல்விப் பணிப்பாளருடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டதையடுத்தே இவற்றின் நிர்வாகம் யாழ். பிராந்திய கல்விப்பணிப்பாளரின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. (இ-173)

## உண்ணாவிரதம் கைவிடப்பட்டது

கொழும்பு,ஒக். 16

டென்மார்க்கில் உண்ணாவிரதம் இருந்த 113 இலங்கைத் தமிழர்கள் தமது உண்ணா விரதத்தைக் கைவிட்டுள்ளனர்.

உண்ணா விரதம் இருந்தவர்கள் பலவீனமுற்றதால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கைக்கு தமது விருப்பத்துக்கு மாறாக திருப்பி அனுப்பப்படுவதை எதிர்த்து இவர்கள் உண்ணா விரதம் இருந்து வந்தது தெரிந்ததே. (இ-3)

## மந்திகை ஆஸ்பத்திரிக்கு குறைந்த அளவு மின்சாரம்

வடமராட்சி, ஒக். 16

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு தொடர்ந்து மட்டுப்படுத்தப்பட்ட மின்சாரமே வழங்கப்பட்டு வருகிறது.

ஒன்றுக்கு மேற்பட்ட மின் பிறப்பாக்கிகள் (ஜெனரேட்டர்கள்) இருந்தபோதிலும், அவற்றுக்குத்தேவையான எரிபொருள்கள் இன்மையால் மின்விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

தண்ணீர் விநியோகம், அவசர மருந்து வகைகளை குளிர் சாதனப் பெட்டிகளில் வைத்துப் பாதுகாத்தல் என்பன மட்டுப்படுத்தப்பட்ட மின் விநியோகத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன.

மாலை 6.30 மணி முதல் இரவு பத்து மணிவரை மட்டுமே மின்சாரம் வழங்கப்படுகிறது. (இ-173)

## நாளை

ஐப்பசி 1

வியாழக்கிழமை

திதி: பஞ்சமி பிற்பகல் 4.08 வரை.

நட்சத்திரம்: கேட்டை பிற்பகல் 3 50 வரை.

[illegible]

சுபநேரம்: 7.32 – 9.02

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## பருத்தித்துறை மருந்தகத்தில் டாக்டர் இல்லை

வடமராட்சி, ஒக். 16

பருத்தித்துறை நகரமத்திய மருந்தகத்தில் டாக்டர் இன்மையால் அங்கு சிகிச்சைக்கு வரும் நோயாளர்கள் சிகிச்சை பெற முடியாது ஏமாற்றத்துடன் திரும்பிச்செல்கின்றனர்.

இம் மருந்தகத்தில் கடமையாற்றிவந்த உதவி வைத்திய அதிகாரி கடந்த முதலாம் திகதி முதல் விடுமுறையில் சென்றுள்ளதாலேயே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

விடுமுறையில் சென்றுள்ள வைத்திய அதிகாரிக்குப் பதிலாக மற்றொரு வைத்திய அதிகாரியை நியமிக்க பிராந்திய சுகாதாரத் திணைக்களம் உரிய நடவடிக்கை எடுக்காததையிட்டு நோயாளர்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர். (இ-173)

## பருத்தித்துறை ஓய்வூதிய வவுச்சர்கள்

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த ஓய்வூதியர்களுக்கான ஒக்ரோபர் மாதத்துக்கான பென்சன் வவுச்சர்கள் நேற்று தபாலில் சேர்க்கப்பட்டுள்ளதாக பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவு கணக்குக் கிளையினர் அறிவித்துள்ளனர்.

சகல வங்கிக் கிளைகளுக்கும் காசோலைகள் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-173)

உள்ளாட்சித்..

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வட்டாரங்களை தி. மு. க. கூட்டணி கைப்பற்றியிருக்கின்றது.

திருச்சி, மதுரை, கோவை, தஞ்சாவூர், சென்னை உட்பட அனைத்து மாநகராட்சி மன்ற மேயர் பதவிகளையும் தி. மு. க. கூட்டணியே கைப்பற்றியது. (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபான்மையினரை அரவணைக்க பெரும்பான்மையினர் தவறிவிட்டனர்

## இதுவே இன்றைய நிலைக்கு காரணம் என்கிறார் ஆயர்

கொழும்பு, ஒக். 16

குடும்பத்திலும், கிராமத்திலும் ஏன் நாட்டிலும் பெரும்பான்மை மக்கள் சிறுபான்மை மக்களை அரவணைத்து அவர்களுக்கு அன்பு காட்டியிருந்தால் நிச்சயமாக இந்த நாட்டில் சமாதானம் நிலை நாட்டப்பட்டிருக்கும்.

இலங்கை ஆயர் பேரவையின் செயலாளர் நாயகமும் இரத்தினபுரி மறை மாவட்ட ஆயருமான வண. கலாநிதி மல்கம் ரஞ்சித் ஆண்டகை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எட்டியாந் தோட்டையில் நடந்த வைபவம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

1950 ஆம் ஆண்டில் இருந்து இந்த நாட்டில் தமிழ்—சிங்களம் என பிரித்து வைத்துக் கூத்துப் பார்த்தவர்கள் இன்றைய அழிவுக்குக் காரணமானவர்கள் என்றும் அவர் கூறினார். (இ-3)

# கைது செய்யப்பட முடியாத ஒருவர் தொடர்பாக குற்றப்பத்திரிகை ஏன்?

## பிரபாமீதானவழக்குகுறித்துதென்னிலங்கைசட்டத்தரணி

கொழும்பு, ஒக். 16

வழக்குத் தாக்கல் செய்யப்படின் சந்தேக நபருக்கு எதிரான குற்றச் சாட்டுக்கள் விசாரிக்கப்பட்டு இலங்கையின் நீதி, ஒழுங்குகளுக்கு அமைய உலகம் ஏற்கக் கூடிய தீர்ப்பு வழங்க வேண்டும். அதனை விடுத்து நீதிமன்றத்தில் ஒப்படைக்க முடியாத—கைது செய்யப்பட முடியாத—சந்தேக நபர் தொடர்பாக அரசு என்ன நோக்கத்துக்காக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தது.

தென்னிலங்கை சட்டத்தரணியான சந்திரபாலா குமாரகே மேற்கண்டவாறு பி.பி.ஸி சிங்கள சேவைக்குத் தெரிவித்தார்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் எனக் கருதப்படுவோரிடமிருந்து அவசர காலச் சட்டத்தின் கீழும் பயங்கரவாத ஒழிப்புச் சட்டத்தின் கீழும் பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலங்களையே பிரபாகரனுக்கு எதிரான சாட்சியங்களாக முன்வைக்கவுள்ளனர் என நான் எதிர்பார்க்கிறேன் என்றும் அவர் கூறினார். (இ-10)

# பிரதேச செயலகங்களுக்கு நேரடியாக நிதி

யாழ்ப்பாணம், ஒக். 16

தரமுயர்த்தப்பட்டுள்ள யாழ்ப்பாணம், நல்லூர், சாவகச்சேரி, பருத்தித்துறை பிரதேச செயலகங்களுக்கு; அபிவிருத்திக்கான நிதி நேரடியாக அடுத்த வருடம் முதல் கிடைக்க விருக்கிறது.

அபிவிருத்திப் பணிகளுக்கென பன்முகப் படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியான 25லட்சம் ரூபாவும்—பிரமாண அடிப்படையிலான நிதியான 12ஆயிரத்து 500ரூபாவும் — நேரடியாக இவற்றுக்கு கிடைக்க விருக்கின்றன

இதுவரை இந்த நிதிகள் யாவும் யாழ். செயலகம் மூலமாகவே கிடைத்து வந்தன.

பிரதேச செயலகங்களே இந்த நிதியில் இருந்து அபிவிருத்தித் திட்டங்களை வகுக்க விருக்கின்றன.

---

உரும்பிராய்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கும்படி நீதிபதி உத்தரவிட்டார்.

வைத்திய பரிசோதனை அறிக்கை கிடைத்ததும் விசாரணை தொடரும் என்று தெரிவித்த நீதிபதி பொலீஸாரைத் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார்.

கைதானவர்கள் அனைவரும் சிப்பாய்கள் தரத்தைச் சேர்ந்தவர்கள் என்றும்—

அவர்களில் ஒரு சிப்பாய் அரச சாட்சியாக மாறுவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளார் என்றும் — தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை — மீட்கப்பட்ட சடலம் பிரேத பரிசோதனைக்காக நேற்று முன்தினம் கொழும்புக்கு அனுப்பப் பட்டுள்ளது தெரிந்ததே.

சடலம் கண்டு பிடிக்கப்பட்ட பகுதியில் கைப்பற்றப்பட்ட வெற்றுச் சாராயப் போத்தல் ஒன்று கைரேகை நிபுணரின் பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை தலைமைப் பீட பொலீஸ் குழுவினர் இது தொடர்பாக தொடர்ந்து விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (இ-3)

# ஜெயலலிதா மீது மக்களுக்கு இன்னும் அதிருப்தி இருந்து வருகிறது

## தேர்தல் முடிவுகள் குறித்து பி.பி.ஸி.

லண்டன். ஒக். 16

தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மீது மக்கள் இன்னமும் அதிருப்தி கொண்டுள்ளனர் என்பதையே உள்ளாட்சித் தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன.

இப்படி பி. பி. ஸி. கருத்து வெளியிட்டது.

கடந்த பொதுத் தேர்தலில் படுதோல்வியைத் தழுவிய அ.தி.மு.க. 8 நகர சபைகளை கைப்பற்றியுள்ளது. இது அக்கட்சிக்கு ஓரளவு ஆறுதல் அளித்தாலும் அ.தி.மு.கவுக்கு ஆதரவு அதிகரிக்கிறது என்று கூறிவிட முடியாது.

தொடர்ந்து இக்கட்சி அடைந்து வரும் தோல்விக்கு காரணம், ஜெயலலிதா பிரசாரத்துக்குச் செல்லவில்லை என்பது ஒன்று

அ.தி.மு க. எதிர்ப்பு அலை இன்னமும் தொடர்ந்து வீசி வருகிறது இன்னொன்று.

முன்னாள் அமைச்சர்கள்மீது சுமத்தப்பட்டுள்ள ஊழல்கள் ஊழல் குற்றச்சாட்டுக்கள், ஜெயலலிதாவுக்கு எதிராகப் போடப்பட்டுள்ள 6,7 வழக்குகள், ஜெயலலிதா மீது மக்கள் அதிருப்தி கொண்டுள்ளதையே காட்டுகிறது.

இந்த அதிருப்தியே தோல்வி தொடர்வதற்குக் காரணம்

அ. தி. மு. க எதிர்ப்பு அலை இன்னும் ஓயவில்லை என்பதையே இத்தேர்தல் முடிவு காட்டுகிறது — என்று பி பி. ஸி. தெரிவித்தது.

# மலசல கூடம் அமைப்பது தாமதம்

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஆயிரம் மலசல கூடங்களை அமைப்பதற்கு பணம் ஒதுக்கீடு செய்யப்பட்ட போதிலும்-சிமெந்து எடுத்து வருவதில் உள்ள இழுபறி காரணமாக இவை அமைப்பதில் தாமதம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது

சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு மேற்படி பணத்தை ஒதுக்கீடுசெய்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ- 145)

# உத்தரப் பிரதேசத்தில் நிச்சயமற்ற நிலைமை

ஐக்கிய முன்னணியின் ஆதரவை அடுத்த 24 மணிநேரத்துக்குள் காங்கிரஸ் கட்சி பெற்றுத்தரவேண்டும் என பகுஜன் சமாஜக் கட்சி காலக்கெடு விதித்திருப்பதையடுத்து உத்தரப்பிரதேசத்தில் புதிய அரசு அமைவது இன்னும் முழுவடிவம் பெறவில்லை.

புதுடில்லியில் நேற்றுப் பேசிய பகுஜன் சமாஜக் கட்சித் தலைவர் காஞ்சிராம் தமது கட்சி பாரதீய ஜனதாக் கட்சிக்கோ ஐக்கிய முன்னணிக்கோ ஆதரவு அளிக்காது என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டார்.

தமது கட்சிசார்பில் ஐக்கிய முன்னணியுடன் பேச்சு நடத்தி வரும் காங்கிரஸ் கட்சித் தலைவர் சீதாராம் கேசரி [illegible] ஆலோசனை கலந்த பின்னர் தாம் விதித்த காலக்கெடுவை [illegible]பதாக அவர் கூறினார்.

மக்கள் தமது கட்சிக்குக் கொடுத்துள்ள ஆணை எதிர்க் கட்சியாக இருக்கத்தான் என்ற அடிப்படையில் அப்படிச் செயற்படவும் தமது கட்சி தயார் என்று அவர் கூறினார்.

உத்தரப் பிரதேசத்தில் ஆட்சி அமைப்பது குறித்து காஞ்சிராம் உண்டாக்கி வரும் நெருக்குதல் காரணமாக பிரதமர் தேவகௌடா புதுடில்லியில் நரசிம்மராவைச் சந்தித்துப் பேசினார்.

ஐக்கிய முன்னணியின் உறுப்புக் கட்சிகள் காங்கிரஸ் மற்றும் பகுஜன் சமாஜக் கட்சிக்கு இடையே எட்டப்பட்டிருக்கும் கருத்தொருமை அடிப்படையில் வி. ஜே பி அல்லாத ஓர் அரசாங்கத்தை அமைக்கும் சாத்தியக் கூறுகளை இரு தலைவர்களும் விவாதித்த[illegible]


தமிழ் - ஆங்கில தட்டச்சு

மற்றும்

றோணியோ வேலைகளுக்கு

அருண்

361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


மரண அறிவித்தல் 2 ஆம் பக்கத்தில்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களதுபணிமனையில் 16-10-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# மண்எண்ணெய் தட்டுப்பாடு; மினிபஸ் சேவை பாதிப்பு

தென்மராட்சி ஒக். 16

மண்எண்ணெய்த் தட்டுப்பாடு காரணமாக தென்மராட்சி மினிபஸ் சங்கம் தனது மினிபஸ் சேவைகளை மட்டுப்படுத்தி உள்ளது.

இதன் காரணமாக சாவகச்சேரி பஸ் நிலையத்தில் பயணிகள் நீண்ட நேரம் காத்திருந்ததைக் காணமுடிந்தது.

பஸ்ஸுக்கு நீண்டநேரம் காத்திருந்த அரச அலுவலகங்களுக்குச் செல்லும் ஊழியர்கள், ஆஸ்பத்திரிக்குச் செல்லும் நோயாளர்கள் மற்றும் பொது மக்கள் பலர் பயணத்தை மேற்கொள்ளமுடியாமல் வீடு திரும்பியதைக் காணமுடிந்தது

எரிபொருள் நிலையங்களில் மண்எண்ணெய் முடிந்து விட்டதாலும் வாகனங்களுக்கு மண்எண்ணெய் வழங்கப்படாததாலும் —

தனியார் கடைகளில் மண்எண்ணெய் விலை அதிகரித்துள்ளதாலும் — மினிபஸ் சேவை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-117)

## புதிய கப்டன்

மேற்கிந்திய தீவின் ''ஏ'' கிரிக்கெட் அணி, டெஸ்ட் மற்றும் ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளில் பங்கு பற்றுவதற்காக இம் மாதம் 27 ஆம் திகதி ஸ்ரீலங்கா வரவுள்ளது.

இப்போட்டிகளில் பங்கு பற்றும் ஸ்ரீலங்கா ''ஏ'' அணிக்கு மாவன் அத்தபத்து தலைமை வகிப்பார். (இ- 10)

# இராமகிருஷ்ண சேவாச்சிரமம் புலமைப்பரிசில்

வடமராட்சி, ஒக். 16

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீடத்துக்கு இவ்வாண்டு தெரிவான பருத்தித்துறையைச் சேர்ந்த மாணவி ஒருவருக்கு பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் புலமைப்பரிசில் வழங்கவுள்ளது.

செல்வி நந்தினி தவயோகராஜா என்ற மாணவிக்கே புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளது.

வருடம் தோறும் ஆறாயிரம் ரூபா வழங்கப்படும் இப்புலமைப்பரிசிலின் முதலாவது கொடுப்பனவு எதிர்வரும் விஜயதசமி தினமான திங்கட்கிழமை இடம்பெறும். (இ-173)

---

தமிழ்க்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பங்குபற்றிய அகில இலங்கை பௌத்த பிக்குமார் சங்கத்தின் செயலாளர் இத்தாபானே தம்மாலங்காரதேரோ பி பி. ஸி சிங்கள சேவைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்ததாவது:-

கடந்த சில நாள்களில் கிழக்கு மாகாணத்தில் பல வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இடம் பெற்ற படுகொலைகள் தொடர்பாக எமக்குக் கிடைத்த தகவல்களின்படி இவை ஆயுதக் குழுக்களாலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால் இவற்றுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் தொடர்புகள் ஏதுமில்லை. விடுதலைப் புலிகளுக்கு திருகோணமலை நகரப் பகுதிக்குள் நுழைவது கடினமான காரியமாகும்.

அங்கு ஈ.பி.டி.பி, ரெலோ, புளொட் ஆகியனவே ஆயுதங்களுடன் நடமாடுகின்றன.

இந்தப் படுகொலைகளை விடுதலைப் புலிகள் தவிர்ந்த ஏனைய ஆயுதமேந்திய அமைப்புக்களே மேற்கொண்டுள்ளதாகப் பலரும் சந்தேகப்படுகின்றனர். பொதுவாக ஈ. பி. டி.பி. அமைப்பினரே இதற்குப் பொறுப்பு எனப் பலரும் கருதுகின்றனர்.

### சத்தியாக்கிரகம்

எனவேதான் அப்பிரதேசத்தில் வாழும் சிங்கள மக்களில் சுமார் எண்ணூறிலிருந்து ஆயிரம் பேர் வரை சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டனர்.

இந்த அமைப்புக்கள் அரசின் இராணுவத்தினருடன் இணைந்து செயற்பட்ட போதிலும் வரையறையை மிஞ்சிய பலநடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன.

அரச காணிகளில் சட்டவிரோதமாக வெளியாரைக் குடியேற்றுதல், சட்டவிரோதமாக வரிகளை வசூலித்தல் ஆகிய நடவடிக்கைகளில் இவைகள் ஈடுபடுகின்றன. இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுவதே அவர்கள் படுகொலைகளுடன் தொடர்புடையவர்கள் என்ற முடிவுக்கு வரக்காரணம் ஆகும்.

### ஆயுதங்களை களைய வேண்டும்

ஆகையால் அவர்களிடமிருந்து ஆயுதங்களைக் களைய வேண்டும் எனக் கோருகிறோம். விடுதலைப் புலிகளிடமிருந்தும் ஆயுதங்களைக் களைய வேண்டும் என இக்காரணத்தினாலேயே கோருகின்றோம்.

நாட்டில் ஜனநாயகம் நிலைத்தோங்க வேண்டுமாயின் ஆயுதக் குழுக்களிடமிருந்து ஆயுதங்கள் களையப்படவேண்டும்.

அரசின் ஒத்துழைப்புடன் ஆயுதம் தாங்கியோர் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டால் வடக்கு—கிழக்கில் இடம்பெற்ற சம்பவங்கள் நாடெங்கும் பரவி ஜனநாயகத்தையும் அமைதியையும் பாதிக்கும் — என்று சொன்னார். (அ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org